உங்களுக்கு நல்வாழ்த்துக்கள்

இது ஒரு

வளர்ந்து பெருகுக வெளியீடு

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

உங்களுக்கு நல்வாழ்த்துக்கள் ...

திருநெல்வேலி திருமண்டலம்

வளர்ந்து பெருகுக வெளியீடு

பேராயர் இல்லம் வளாகம்

பாளையங்கோட்டை

பொருளடக்கம்

	ஆசியுரை	3
	ஆசிரியர் உரை	4
	முன்னுரை	5
1.	கடவுளின் திட்டத்தில் திருமணம்	7
2.	இல்வாழ்வில் மகிழ்ச்சிக்கு வழி	9
3.	மணமகனுக்கு ஆலோசனைகள்	16
4.	மணமகளுக்கு ஆலோசனைகள்	20
5.	குடும்பப் பொருளாதாரத்தைத் திட்டமிடுதல்	24
6.	திருமணம் – பாலுறவு – குடும்பம்	26
7.	குழந்தை வளர்ப்பு	30
8.	மணவாழ்வுப் பிரச்சினைகள்	34
9.	மனம் திறந்து பேசுங்கள்	40
10.	மணமுறிவுக்கு இடமேயில்லை	43
	நிறைவுரை	48

The Church of South India

Tirunelveli Diocese

16, North Highground Road,
Bishopstowe,
Post Box No. 118,
Palayamkottai - 627 002.
Tel : 0462 - 2578744

The Rt Rev Dr S Jeyapaul David
Bishop in Tirunelveli & President NCCI

ஆசியுரை

திருமண வாழ்க்கையில் இனிதே அடியெடுத்து வைக்கும் உங்களை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உளமார வாழ்த்துகிறேன்.

புதிதாக, திருமண தம்பதியருக்காக இந்த சிறிய புத்தகத்தை அருள்திரு. J.P.M. **வசந்தகுமார்** ஐயரவர்கள் சிறப்பாக எழுதியுள்ளார்கள். அவர்கள் இதற்கான சிறப்பு பயிற்சியும் பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் தலைப்புகளுக்குப் பொருத்தமான படங்களை வரைந்து கொடுத்த அருள்திரு.K.டேனியல் ஸ்டீபன்ராஜ் ஐயரவர்களையும் பாராட்டுகிறேன்.

இந்த சிறிய நூல் வாயிலாக உங்களது இல்லற வாழ்க்கை நன்மையாக அமைய சில ஆலோசனைகள் வழங்கப் பட்டுள்ளன. இவை பலரது அனுபவத்தின் வாயிலாக வடித் தெடுக்கப்பட்டுள்ள வார்த்தைகள். நாம் வெற்றிகரமாக வாழ அன்பும், பொறுமையும் அடிப்படையான குணநலன்கள். பரிசுத்தாவியானவர் மூலமாக நீங்கள் ஒருவரோடொருவர் நெருக்கமாக இணைக்கப்பட்டு, பரிசுத்த சந்ததியைக் கண்டு, வாழ்ந்து சுகித்திருக்க ஆசி கூறுகிறேன்.

S. ஜெயபால் டேவிட்
பேராயர்
நெல்லை திருமண்டலம்

ஆசிரியர் உரை

மனுக்குலம் மனநிறைவான, மகிழ்ச்சியான வாழ்வை வாழவேண்டும் என்பதே கடவுளின் விருப்பமாகும் [யோவான் 10:10]. குறிப்பாக திருமண வாழ்வில் மகிழ்ச்சியும், மனநிறைவும் பூலோக சொர்க்கத்தை உருவாக்கித் தரும் என்றால் அது மிகையாகாது. அதற்கு உதவி செய்யும் வகையில் உருவாக்கப் பட்டதுதான் இந்நூல்.

இது நமது அன்புப் பேராயர் அருட்பெருந்திரு. S. ஜெயபால் டேவிட் அவர்கள் எழுதிய "உங்களுக்கு நல்வாழ்த்துக்கள்" என்ற நூலை அடிப்படையாகக் கொண்ட ஓர் படைப்பாகும். இப்பணியைச் செய்ய என்னை உற்சாகப்படுத்திய பேராயரவர்களுக்கு எனது உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூறுகிறேன்.

மனிதர்களில் பலவகையுண்டு. சிலர் வாழ்க்கையை அதின்போக்கிலேயே விட்டு எல்லாம் தலையெழுத்து என்று வாழ்பவர்கள். சிலர் எல்லாப் பிரச்சினை களுக்கும் பிறரையே குற்றம் சாட்டி சிறிதும் தங்களை மாற்றிக் கொள்ள விரும்பாதவர்கள். வேறு சிலரோ தங்கள் வாழ்வில் மாற்றங்களைச் செய்ய சம்மதித்து விவேகத்திற்கும், வெற்றிக்கும் நேராக திரும்பி நடப்பவர்கள். இந்த மூன்றாவது வகையினருக்கே இந்நூல் மிகவும் பயனுடையதாயிருக்கும் என்று கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

திருமணமானவர்கள், கணவன் மனைவி இருவருமாக சேர்ந்து இந்நூலை வாசியுங்கள். குறிப்பாக உங்களைச் சரி செய்து கொள்ளவும், உங்கள் வாழ்க்கை முறையை மேம்படுத்தவும் இந்நூலை "அமுதமாக" பயன்படுத்துங்கள். "இந்த ஆலோசனை என் கணவருக்குத்தான்" என்று பெண்களும், "இந்த ஆலோசனை என் மனைவிக்குத்தான்" என்று ஆண்களும் ஒருவர் மீது மற்றவர் இந்நூலை "ஆயுதமாக" பயன்படுத்தாதிருங்கள்.

இதில் தரப்பட்டுள்ள ஆலோசனைகள் உங்கள் வாழ்வில் பலன் தரவேண்டுமானால், அவைகளை அன்றாட வாழ்வில் செயல்படுத்த ஆரம்பியுங்கள். "ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது" என்பது பழமொழி.

கருத்துடன் வாசியுங்கள் இந்நூலை
கனிவுடன் நேசியுங்கள் வாழ்க்கைத் துணையை
கர்த்தரின் கிருபையால் அடைவீர் மேன்மை

நலம் வாழ வாழ்த்தும்

J.P.M. வசந்தகுமார்

சேகரகுரு, மகாராஜநகர்.

முன்னுரை



இன்று முதல்.....

பகிர்ந்து பங்கேற்று,
வழங்கி வாழ்வீந்து,
அன்புடன் அன்பைப் பெற்று
ஒன்றுபோல் ஒன்றி நடந்து
உள்ளத்தால் உறவு பேசி,
உள்ளே ஊடுருவி
என்னில் உன்னைக் கண்டு
சேர்ந்து, சிரித்து, மகிழ்ந்து,
அழுகையால் அண்டிச் சேர்ந்து
ஆண்டவரை ஆராதித்து
எப்பொழுதும் அவரைச் சார்ந்து,
அவரையே நம்பி,
அவரையே நன்றியுடன்
ஒருவருக்காக ஒருவர்
துதிப்போமாக!

இயேசு சொன்னது .....

“ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர்
அவர்களை ஆணும் பெண்ணுமாக
உண்டாக்கினார்.... இதினிமித்தம்
புருஷனானவன் தன் தகப்பனையும்
தாயையும் விட்டு தன் மனைவியோடே
இசைந்திருப்பான். அவர்கள் இருவரும்
ஒரே மாம்சமாயிருப்பார்கள்....
இப்படியிருக்கிறபடியினால் அவர்கள்
இருவராயிராமல்
ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்...
தேவன் இணைத்ததை மனிதன்
பிரிக்காதிருக்கக்கடவன்”

மத்தேயு. 19:4-6

இருவரும் ஒரே சரீரமாயிருக்கிறார்கள்.....

மணமக்களே உங்களுக்கு நல்வாழ்த்துக்கள்!

புத்தாடை சரசரக்க... உள்ளங்கள் படபடக்க... மங்கள கீதங்கள் முழங்க.... மலர் மணக்க, பெற்றோர் உளம் நிறைய... உற்றார் சூழ்ந்து வாழ்த்த... இறைமகன் இயேசுவினால் உருவானீர் புது குடும்பமாய். நண்பர்களின் வாழ்த்தொலிகள்... இடையிடையே பளிச்சென்று காமிராவின் மின்னல்கள்... வரிசையாகப் பரிசுகள்.... அப்பாடா அத்தனை பேர்க்கும் வணக்கம் சொல்லி கையெல்லாம் ஓய்ந்து விட்டது.

“மணமகன் வாழ்த்துரைகளுக்கு பதில் உரைப்பார்”எதிர்பாராமல் இப்படி ஓர் அறிவிப்பு. முதலிலேயே தெரிந்திருந்தால், ஆயத்தம் செய்து, அழகான வசன நடையில் அள்ளி வீசியிருக்கலாம். புது மனைவி வேறு பார்த்துக் கொண்டிருக்கிறாள். மைக்கைப் பிடித்துக் கொண்டார்: ஆரம்பித்தார் மணமகன்... “எனது திருமணத்திற்கு...” நல்லவேளை யாரோ சைகை காட்டி விட்டார்கள். “சாரி, எங்களது திருமணத்திற்கு...”

புதிய உறவுகள், புதிய அனுபவங்கள், புதிய சூழ்நிலைகள். நான், என் வீடு, என் விருப்பம் என்ற சொற்கள் இனி அர்த்தம் மிகுந்த நிறைவான உறவில் கலந்து நாம், எங்கள் வீடு, நம் விருப்பம் என்று மாறவேண்டும். அவர்கள் இருவராயிராமல் ஒருவராயிருப்பார்கள் என்று திருமறை கூறுகிறது. அப்படியென்றால் இருவரும் ஒருவரையொருவர் ரசித்துப் பார்த்துக் கொண்டிருப்பது மட்டுமல்ல. இருவரும் சேர்ந்து உலகத்தை ஒருமித்தக் கண்ணோட்டத்துடன் நோக்குவார்கள் என்று பொருள்.

இந்த நூல் .....

ஒரே சரீரமாக இணைக்கப்பட்டுள்ள உங்களுக்கு இந்த நூல் திருமணப் பரிசாக தரப்பட்டுள்ளது. இந்நூலை கவனத்துடன் வாசியுங்கள். வாசித்தவற்றை உங்கள் இல்லற வாழ்வில் நடைமுறைப்படுத்துங்கள். இறைமகன் இயேசுவின் திருவருளால் உங்கள் இல்லற வாழ்வு சிறந்து ஒளிரட்டும்.

1. கடவுளின் திட்டத்தில் திருமணம்



குடும்ப வாழ்வு என்னும் அமைப்பு கடவுளின் ஏற்பாடே. முதல் மனிதனாகிய ஆதாம் தனிமையாய் இருந்தான். அது நன்றாக இல்லை யென்று ஆண்டவர் கண்டு, அவனுக்கு ஏவாள் என்றொரு மனைவியைத் தந்தார். ஏவாளைக் கடவுள் உருவாக்கி மனிதனிடம் கொண்டு வரும் காட்சி எத்தனை அழகு! மனிதனின் உறக்க நிலையில் அவனது துணைவி படைக்கப் பட்டாள் என்று ஆதியாகமம் கூறுகின்றது. அவ்வளவுக்கு பெரிய செயலாக, உயர்வான செயலாக, மனித அறிவிற்கு அப்பாற்பட்ட இரகசியமாக, அற்புதமாக கடவுள் அதனை அமைத்திருக்கின்றார். புனித பவுலும் இதனை மாபெரும் இரகசியமென்று ஒப்புக் கொள்கிறார் (எபே. 5:32). ஆம், ஒரு மனிதனுக்கு ஒரு மனைவி அமைவது ஓர் அற்புதம் தான். யார் யாரையெல்லாமோ எதிர்பார்த்தும் ஒன்றும் நடக்காமல் எதிர்பாரா விதமாய் திருமண உறவுகள் அமைவதில் இருக்கும் அற்புதத்தை இன்றும் நம் சமூக சூழலில் காண்கிறோம் அல்லவா!

மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று அறிந்த இறைவன், அவனுக்கு ஏற்றத் துணையை உருவாக்கி, அவளை அவனிடம் அழைத்துச் சென்று அவனுக்குத் துணையாக்கினார் என்பதே திருமறை சாற்றும் உண்மை (ஆதி 2:18-22). ஆகவே கடவுளே திருமணத்தின் தொடக்கத்திற்கு மூல காரணர்; அவரே முதல் திருமணத்தை முன்னின்று நடத்தி வைத்தவர். மனிதன் தனிமையாயிருப்பதை அவர் நல்லதென்று காணவில்லை. அவனுக்கு ஏற்ற ஒரு துணையாக ஏவாளை உருவாக்கி முடித்தபோது தான் படைப்புத் தொழிலில் இறைவன் நிறைவைக் கண்டார்.

ஆகவே படைப்பின் நிறைவாக, உச்சியாக விளங்குவது திருமணம். இது தனிமையில் வாடிய இதயத்திற்குக் கிடைத்த பதில் ஆகும்.

குடும்ப வாழ்க்கையின் நோக்கங்கள்...

கடவுளே ஏற்படுத்திய இந்த புனிதமான திருமணத்திற்கு சிறப்பான நோக்கங்கள் உண்டு. அந்த நோக்கங்களாவன:

1. வாழ்க்கையின் எல்லாச் சூழ்நிலையிலும்
ஒருவருக்கொருவர் நட்பு, உதவி,
ஆதரவு வழங்கவும்;

2. நமது இயற்கை உணர்ச்சிகள், மனிதனாக
வந்த இயேசுவில் புனிதம் பெற்றுள்ளன.
கணவன் மனைவி இருவரும் மகிழ்ச்சிப்
பரவசத்திலும், அன்பின் அணைப்பிலும்,
ஒருவரையொருவர் அறிந்து கொள்ளவும்
உடலுறவு ஐக்கியத்தினால் உள்ளமும்
உயிரும் வலுவான இணைப்பில் திளைக்கவும்;

3. பிள்ளைகளைப் பெற்று இயேசு கிறிஸ்துவைப்
பற்றி அறிகிற அறிவில் வளர்க்கவும்
குடும்ப வாழ்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட நோக்கங்களை மனதில்கொண்டு வாழும் வாழ்க்கை தான் திருமண வாழ்வில் மனநிறைவைத் தரும். தொடர்ந்து வரும் பாடத்தில் இல்வாழ்வில் மகிழ்ச்சிக்கான வழிகளைக் குறித்து பார்க்கலாம்.

2. இல்வாழ்வில் மகிழ்ச்சிக்கு வழி

1. கிறிஸ்துவே வாழ்வின் ஆதாரம் [எபே. 2:20]

இயேசு கிறிஸ்து நமது அனுதின ஆலோசனைக் கர்த்தாவாக விளங்குகிறார். பணமோ, கல்வியோ, அந்தஸ்தோ, அழகோ எவையிருந்தாலும் கிறிஸ்து உங்கள் தலைவராக விளங்கினால் மாத்திரமே வாழ்க்கை வெற்றியாக அமையும்.

2. ஒருமித்த ஜெபம்

அதிகாலையிலேயே அந்தந்த நாளைத் துதியோடு ஜெபித்து ஆண்டவருக்கு ஒப்புக் கொடுங்கள். "அதிகாலையில் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்" (நீதி. 8:17). இரவிலே தற்பரிசோதனை செய்து, அறிக்கையிட்டு, நன்றி செலுத்த மறவாதீர். காரியசித்தி கர்த்தரால் வரும். வாரத்தில் ஒருநாள் உபவாசித்து ஜெபியுங்கள். ஒரு நாளில் ஒரு முறையாகிலும் இருவரும் சேர்ந்து ஜெபித்தல் அவசியம். "கூடி ஜெபிக்கும் குடும்பம் கூடி வாழும் குடும்பம்" என்ற முதுமொழிக்கிணங்க குடும்ப ஜெபம் செய்து ஒற்றுமையாக வாழுங்கள்.

3. திருமறை தியானம்

திருமறையை முறையாகத் தினந்தோறும் வாசித்துத் தியானம் செய்யுங்கள். அதற்குத் துணையாக ஒன்று அல்லது இரண்டு தியானப் புத்தகங்களைப் பயன்படுத்துங்கள். மிக முக்கியமாக திருவசனத்துக்குக் கீழ்படியுங்கள். வாழ்க்கைப் பாதையில் அதுவே உங்கள் கால்களுக்குத் தீபமாய்த் திகழும். உங்கள் உரையாடல் திருமறை சார்ந்திருப்பதாக!

4. இல்லறத்தில் நல்லறம்

நன்மை செய்யவும் தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள். இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார் (எபி. 13:16).

5. உணர்வுகளை மதிப்பீர்

ஒருவருக்கொருவர் விருப்பு வெறுப்புகளை மதித்து ஏற்றுக் கொள்ள வேண்டும். ரூபாவும் ரூபனும் துணிக்கடைக்குப் போனார்கள். ரூபன் கண்ணுக்கு, கத்தரிப்பு கலர் சேலைகள் எல்லாம் அழகாய் தோன்றியது. ரூபாவுக்கு அந்த நிறமே பிடிக்காது. ரூபாவும் அழகான கட்டம் போட்ட சட்டை ஒன்றை அவனுக்கு வாங்க வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தாள். அவனோ எனக்குச் சிறைக் கைதி உடை வேண்டாம் என்றான். யாரைப் பிரியப்படுத்த உடையணிகிறோம் என்று ஒரு கேள்வி கேட்டுக் கொண்டார்கள். கத்தரிப்பூ சேலை, கட்டம் போட்ட சட்டையோடு மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு வந்தார்கள்.

திருமண வாழ்வின் சுவை, இரு வித்தியாசமான நபர்கள் ஒன்றாய் செயல்பட எடுத்துக்கொள்ளும் தொடர் பிரயாசங்களே. ஒருவரை யொருவர் உயர்வாக மதித்தல் இதற்கு மிக அவசியமாகும்.

6. தாழ்வு மனப்பான்மையைக் களைவீர்

சேகர் ஒரு முதுநிலைப் பட்டதாரி. கிராமச் சூழ்நிலையில் வளர்ந்தவன். கிராமப்புறத்துக் கல்லூரியில் படித்தவன். வங்கியில் வேலை. நல்ல சம்பளம் வாங்குபவன். அவனுக்கு மனைவியாக வந்த மாலா நகரத்தில் வளர்ந்தவள். ஆங்கிலத்தில் சரளமாக பேசுவாள். சேகரின் அழகும், அறிவுத்திறனும் அவளை வெகுவாய் கவர்ந்தது. அவன் மீது எல்லையில்லா அன்பு கொண்டு அவனுக்காய் எதையும் செய்வதில் மகிழ்ச்சி கொண்டாள். சேகருக்கோ அவளது நகர்ப்புற நடை உடை பாவனைகளைப் பார்த்தவுடன் ஒரு தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டது. தாழ்வு மனப்பான்மை அநேக நேரங்களில் அதிகாரப் போக்காக வெளிப்படும். ஆகவே மாலாவிடம் அடிக்கடி கோபப்பட்டான். எதைச்

செய்தாலும், அவளைக் குறை கூறி மட்டம் தட்ட முயற்சித்தான். மாலாவால் அவனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவன் தன்னை மதிக்கவில்லையென்று சேகர் பிறரிடம் கூறிக்கொண்டான்.

நல்லவேளையாக இருவரும் தங்கள் பிரச்சினைகளை நல்லாலோசனைப் பணியாளரிடம் பகிர்ந்து கொண்டார்கள். தாழ்வு மனப்பான்மையின் அபாயத்தையும், மாலாவின் உண்மை அன்பையும் சேகர் புரிந்து கொண்டபோது, அவர்கள் வாழ்வில் ஓர் ஆனந்த திருப்பம் ஏற்பட்டது. தாழ்வு மனப்பான்மை பல காரணங்களினால் ஏற்படலாம். கல்வி வித்தியாசம், பெற்றோரின் பதவி, பொருளாதார ஏற்றத்தாழ்வு, சமுதாய அந்தஸ்து, தம்பதிகளின் சரீர உயரம், நிறம், பருமன், அங்கவீனங்கள், ஊதிய வித்தியாசம் முதலானவை சில காரணங்களாகும்.

7. உயர்வு மனப்பான்மையை அகற்றுவீர்

மல்லிகாவின் தகப்பனார் பஞ்சாயத்து தலைவர். அவள் கணவன் குடும்பத்தினரோ சாதாரண நிலையில் உள்ளவர்கள். எங்கள் குடும்பம் எங்கள் அந்தஸ்து, எனது தகப்பனார் என்ற ஆணவம் அவளது பேச்சில் அடிக்கடி தொனிக்கும். இப்படிப்பட்ட மன நிலை குடும்ப ஒற்றுமையைக் குலைக்கும்.

8. சந்தேகக்கோடு, அது சந்தோஷக்கேடு

இது உலகமெங்கும் குடும்பங்களை அழிக்கின்ற "சந்தேகம்" என்னும் தீரா வியாதியே. இது ஏற்பட நியாயமான காரணம் தேவையில்லை. எவ்வளவு தெளிவான விளக்கத்தாலும் இது தீர்வதுமில்லை. ஆகவே சந்தேகம் உருவாகாத முறையில் நடந்து கொள்வது சாலச் சிறந்தது. குறிப்பாக மற்ற ஆண் / பெண்ணிடம் அளவோடு, தூர நின்று பழகி வருவது நல்லது.

சந்தேகம் ஏற்பட்டதென்றால் ஆண்டவரிடம் முதலாவது அவற்றை கூறு. அவர் முழு உண்மைகளையும் அறிந்திருக்கிறவர். உன் சந்தேகம்

ஆதாரமற்றதாயிருக்கலாமே! பிறகு உனது கணவர் / மனைவியிடம் ஆத்திரப்படாமல் அமைதியாக விசாரித்துப் பார். விவரங்களை அறியுமுன் நீயாகவே முடிவுகள் எடுத்துக் கொள்ளாதே. உன் கணவர் / மனைவி கூறும் விளக்கத்தை விசுவாசித்து ஏற்றுக்கொள். மற்றவர்களை நம்புவதை விட அது மேலானதல்லவா? எஞ்சிய காரியங்களை ஆண்டவருடைய பொறுப்பில் விட்டு விட்டு சந்தோஷமாயிரு.

9. இன்பத்திலும், துன்பத்திலும் இணைந்து வாழ்வீர்

திருமண வாழ்வில் ஈடுபடப் போகும் தம்பதிகளைப் பார்த்து திருமணம் நடக்கும் போது இன்பத்திலும், துன்பத்திலும் இணை பிரியாமல் ஒன்றாக இருப்பீர்களா என்று குருவானவர் கேட்கிறார். அப்படி என்றால் வாழ்க்கை என்பது இன்பமும், துன்பமும் நிறைந்தது தான் என்று முன்னமே நினைவுறுத்தப்படுகிறது. இதற்கு ஆம்,சரி என்று தான் எல்லோரும் சொல்கின்றனர். ஆனால் திருமணம் ஆன பின்பு கணவனும் மனைவியும் இன்பத்தில் மட்டும் தான் சேர்ந்து வாழ விரும்புகின்றனர். துன்பம் என்று வரும்போது சோர்ந்து போகின்றனர். அல்லது பிரிந்து விடுகின்றனர். அல்லது ஒருவர் மீது ஒருவர் குற்றம் சுமத்திக் கொண்டு திரிகின்றனர். இதை வாசிக்கும் அன்பர்களே, நீங்கள் அப்படியிருக்கலாகாது. இன்பத்திலும் துன்பத்திலும் உண்மையுள்ளவர்களாய், கரிசனை உள்ளவர்களாய் வாழுங்கள். அப்பொழுது உன்னதமான கடவுள் உங்களை உயர்த்துவார்.

10. உள்ளத்தின் உணர்வுகளைச் சொற்களில் வெளிப்படுத்தக் கற்றுக்கொள்வீர்

இது சிலருக்கு கடினம், சிலருக்கு எளிது. நினைப்பதையெல்லாம் படபடவென்று பேசித் தீர்த்துவிடுவாருண்டு. நினைப்பதைக் கூறிவிடும் பழக்கம் இல்லாமல் திணருவாரும் உண்டு. உள்ளத்தின் உணர்வுகளைத் திறந்து காட்டினால் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளப்படுவோம், கேலி

செய்யப்படமாட்டோம் என்ற நம்பிக்கையின் சூழ்நிலை கணவன் மனைவிக்கிடையே உருவாக்கப்படவேண்டும். தம்பதியராக உங்கள் இருவருடைய ஆசைகள், கனவுகள், ஏக்கங்கள், விருப்பங்கள், முயற்சிகள், ஏமாற்றங்கள், இன்பங்கள் முதலியவை பற்றி திறந்து பேசக் கற்றுக் கொள்ளுங்கள்.

11. பாராட்டப் பழகுங்கள்

பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பது போல், திருமண அன்பு மாறாதிருக்க, தம்பதியர் ஒருவர் ஒருவரை அவரவர் தம் நிறை குறைகளோடு ஏற்று வாழ வேண்டும். திருமண அன்பைப் பெரிதும் வளர்க்க, அதிக முயற்சி தேவைப்படாத, சிறு சிறு செயல்களான கனிந்த பார்வை, ஓர் இன்சொல், பாராட்டு, தட்டிக் கொடுத்தல், புன்முறுவல், அனுதாபம், தினமும் அதிகம் இடம் பெற வேண்டும்.

குறிப்பாக, சிறிய காரியங்களையும் பாராட்டிட பழகுங்கள். அது முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும். வீட்டை ஒழுங்குபடுத்தி மனைவி வைத்திருந்தால் ரொம்ப நல்லாயிருக்கே என்று பாராட்டுங்கள். அடுத்த நாள் பார்த்தால் அது இன்னும் அழகாக ஒழுங்குப்படுத்தப்படும். தன் முயற்சியில் உங்கள் கவனம் படவேண்டும் என்பது தானே அவளுடைய ஆசை. அது போன்றே மனைவி கணவனுடைய வேத அறிவை, அவர் ஜெபம் செய்யும் விதத்தை, அவர் காரியங்களை நேர்த்தியாய் செய்து முடிக்கும் திறத்தைப் பாராட்டிப் பாருங்கள். அது கணவன் மனைவிக்கிடையே அன்பின் பெருக்கத்திற்கு வழி செய்யும்.

மேலும், நீங்கள் ஒருவரையொருவர் பாராட்டுவதை உங்கள் பிள்ளைகள் கேட்கட்டும்; அப்பொழுது உங்கள் பிள்ளைகளின் மத்தியில் உங்கள் மேலுள்ள மதிப்பு பலமடங்கு உயரும். ஒருவரையொருவர் கரித்துக் கொட்டுவீர்களென்றால் உங்கள் பிள்ளைகளின் மத்தியில் உங்களை பற்றிய அலட்சியம் உண்டாகும்.

12. எப்பொழுதும் உண்மையே பேசுங்கள்

கணவனுடைய வாழ்க்கை மனைவிக்கும், மனைவியின் வாழ்க்கை கணவனுக்கும் திறந்த புத்தகத்தைப் போலிருக்க வேண்டும். ஒருவருக் கொருவர் சிறிய காரியங்களையும் கூட மறைக்கக் கூடாது. மறைத்த காரியங்கள் வெளிப்படும்போது சந்தேகமும், கோபமும், நம்பிக்கை யின்மையும் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

13. நன்றியுடையவர்களாய் இருங்கள்

இந்திய சூழ்நிலையிலே இந்த நன்றி என்ற பதம் கணவன் மனைவி நடுவில் அவ்வளவாய் காணப்படுவதில்லை. என் பேண்ட் ஷர்ட் எல்லாம் துவைத்து அயன் பண்ணியிருக்கிறாய், ரொம்ப நன்றி. இன்றைக்கு நல்ல சமையல், உனக்கு ரொம்ப தேங்க்ஸ். எனக்காக நீ ரொம்ப அழகாய் டிரஸ் பண்ணியிருக்கிறாய், நன்றி என்று கணவன்மார் சொல்லத் தொடங்கி விட்டால் மனைவி இன்னும் உற்சாகமாய் தன் வேலைகளைச் செய்வாள். அது போன்றே கணவன் செய்யும் உதவிகளுக்கு மனைவியும் நன்றி, தேங்க்ஸ் என்று சொல்லப் பழகிக்கொண்டால் கணவனும் உற்சாகமாய் குடும்ப காரியங்களில் ஈடுபடுவார்.

14. குறைகளின் மத்தியில் நிறைவைக் காணுங்கள்

ரோஜாச் செடியைப் பார்க்கும் போது அதில் முள் இருக்கிறதே என்று குறை கூறாமல், இத்தனை முள் உள்ள செடியில் இவ்வளவு அழகான மலர்கள் இருக்கின்றனவே என்று மகிழக் கற்றுக் கொள்ளுங்கள். குறை சொல்வது எளிது. குறை தீர வழி கண்டு கொள்வது தான் புத்திசாலித்தனம். இருட்டாக இருக்கின்றதே என்று சொல்லிக் கொண்டே இராமல், அந்த இருள் போக ஒரு சின்ன மெழுகுவர்த்தியையாவது ஏற்ற முயலுங்கள்.

15. பிரச்சினைகளை, அது ஏற்பட்ட நாளிலேயே சரிசெய்வீர்

இரண்டு சக்கரமுள்ள ஒரு வண்டி சுமுகமாக செல்ல வேண்டுமானால் இசைவு அவசியம். இசைவு இல்லை என்றால் அது சுமூகமாக செல்லாது. இது போன்றே கணவன் மனைவிக்கு இடையே இசைவு இல்லை யென்றால் வாழ்க்கை சுமுகமாக அமையாது. சின்னச் சின்ன பிரச்சினைகளை

உடனடியாக சரி செய்யவில்லை என்றால் அவை ஒன்று சேர்ந்து பெரிய பிரச்சினையாகி, கடைசியில் நீயா, நானா **(Ego Problem)** பிரச்சினைக்கு கொண்டு போய் விடுகிறது.

எனவே இசைவான வாழ்விற்குத் தடையாகவுள்ள அவ்வப்போது எழும் பிரச்சினைகளை சரி செய்து விட வேண்டும். கூடுமானால் பிரச்சினை எழுந்த அதே நாளிலேயே சரி செய்து விடுவது நலம். நாளாக ஆக மன்னிப்பதும், சரி செய்வதும் கடினமாகிவிடும் பவுலடியார் இவ்வாறு கூறிகிறார்: "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள். சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன் உங்கள் எரிச்சல் தணியக் கடவது" (எபே 4:26) கணவன் மனைவிக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளை அன்றே சரிசெய்து சமாதானத்துடன் படுக்கைக்கு செல்வது அவசியம்.

16. தரமான நேரத்தை (Quality Time) உருவாக்குவீர்

சில குடும்பத் தலைவர்கள் தங்கள் வேலை அல்லது தொழில் நிமித்தமாக அடிக்கடி குடும்பத்தை விட்டுப் பிரிந்திருக்க நேரிடலாம். இப்படிப்பட்ட கணவன்மார் தாங்கள் வீட்டில் இருக்கும் நாட்களை தரம் உள்ளதாக மாற்றிக் கொள்ளவேண்டும் **(Best use of Available Time)**. அதாவது மனைவி பிள்ளைகளுடன் மனம் விட்டுப் பேசுதல், அவர்களுடைய பிரச்சினைகளைக் கேட்டல், அவர்களுடன் சேர்ந்து திட்டமிடுதல், அவர்களை வெளியே அழைத்து செல்லுதல் போன்றவற்றின் மூலம், தான் வீட்டில் இருக்கும் கொஞ்ச நாட்களையும் மகிழ்ச்சியான, அர்த்தமுள்ள, தரமான நாட்களாக மாற்றிக் கொள்ளலாம்.

3. மணமகனுக்கு ஆலோசனைகள்



பெரிய பதவியையும், பெரும் பொறுப்புகளையும் கடவுள் உனக்குக் கொடுத்துள்ளார்.

ஒரு கிறிஸ்தவ குடும்பத்தின் தலைவன்!

உன் அன்பு மனைவியின் கணவன்!

உன் அழகிய பிள்ளைகளின் தகப்பன்!

ஆனால் எப்பணியும் சிறப்பாக அமைய ஆயத்தமும் முயற்சியும் இன்றியமையாதவை. எனவே எல்லாவற்றையும் விட சிறப்பு வாய்ந்த குடும்ப வாழ்விற்குச் சில தகுதி நிலைகளை நீ பெறுதல் மிக அவசியம்.

1. ஆன்மீக வீரனாயிரு
ஆண்டவர் மீது விசுவாசமுள்ளவனாயிரு.

ஒரு சிறந்த ஜெப வீரன் தானியேலைப் போல (தானி 6:10) வேத வசனத்தை நேசித்து, வாசித்து, தியானித்து, கற்று அறிந்திரு. "கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்". (சங். 1:1,2) ஒரு நாளைக்கு குறைந்த பட்சம் மூன்று தரம் நீ ஜெபிப்பது உன் குடும்பத்திற்கு நன்மையாக அமையும்.

2. தீமையானவற்றை மன உறுதியோடு
விலக்கும் பலவானாயிரு

மதுபானத்தைத் தீர்மானமாக விலக்கிவிடு. குடிப்பழக்கம் உனது உடலையும், பொருளையும், உனது குடும்ப வாழ்வின் சமாதானத்தையும் திட்டமாகக் கெடுத்து விடும் (நீதி. 23:28). துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறி கொள்ளாமல் ஆவியினால் நிறைந்திருங்கள் (எபே. 5:18-21).

3. கற்புள்ளவனாயிரு

ஆண்களுக்கு கற்பு முக்கியமானது. பிறர் முகம் பாராது கற்புள்ளவனாய் நீ வாழ்வது அவசியம் (ஆதி. 39:6-21). பிற பெண்களோடு கற்பு நெறியில் நின்று பழகு. "பிறர் முகம் பாராமல்" வாழ நீ வாக்குக் கொடுத்துள்ளாய். துரோகத்தை கடவுள் பொறுத்துக் கொள்வதில்லை. ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்"(மல் 2:13-16). "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வாழ வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசி மார்க்கத்துக்கு விலகியிருங்கள்"(1தெச.4:3-8). (இவைகளையும் வாசியுங்கள்: நீதி. 6:27-29, 32, 33, 5: 15-19. எபே. 5:5).

4. மனைவியின் தேவைகளைச் சந்திப்பவனாயிரு

அநேக குடும்பங்களில் கணவன் தன் சொந்தத் தேவைகளைச் சந்திப்பதுபோல மனைவியின் தேவைகளைச் சந்திக்க அறிவதில்லை. மனைவியை அழகாக உடுத்துவிக்கும், அவளுடைய அடிப்படை தேவைகளைச் சந்திக்கும் பாசமுள்ள கணவனாய் இரு.

மேலும் சில ஆலோசனைகள்

☞ நீ கடவுளின் திட்டத்தில் ஒரு புதிய தனிக் குடும்பத்தின் தலைவன். உனது குடும்பத்திற்கான தீர்மானங்களை உது மனைவியைக் கலந்து எடுப்பது உனது பொறுப்பு (ஆதி 2:24, மத் 19:4-6) பெற்றோர் மற்றும் பெரியவர்களின் அனுபவங்களைக் கேள்; ஆனால் தீர்மானங்கள் உனது குடும்பத்தின் தீர்மானங்களாக அமையட்டும்.

☞ உன் மனைவி ஆண்டவரால் உனக்குக் கொடுக்கப்பட்டவள். "நான் எதிர்ப்பார்த்த அளவு நீ அழகுள்ளவள் அல்ல, அறிவுள்ளவள் அல்ல" போன்ற குற்றச்சாட்டுகளைத் திருமணத்திற்குப் பின்னர் கூறி அவளை வேதனைப்படுத்த வேண்டாம்.

☞ உன் மனைவி குடும்பக் காரியங்களைக் குறித்து பேசும் போது அதைக் காது கொடுத்துக் கேள். தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டு, செய்தித்தாளைப் படித்துக் கொண்டு அவள் பேசுவதை அலட்சியம் செய்யாதே.

☞ உன் மனைவி தனது பெற்றோரைப் பற்றி மதிப்பும் பாசமும் வைத்திருப்பது இயற்கைதானே! அவர்களைப் பற்றி கிண்டலாகவும் குறைவாகவும் நீ பேசினால், அவளின் உள் மனதில் நீ ஆழமான காயங்களை ஏற்படுத்துகிறாய்.

☞ எப்பொழுதும் (வீட்டிலும் கூட!) சுத்தமாகவும், வசீகரமாகவும் இருக்க கவனம் செலுத்து; உன் மனைவிக்கு விருப்பமான ஆடைநிறம், நடையுடை பாவனைகளைத் தெரிந்து கொள்.

☞ உன் மனைவி செய்யும் சிறந்த காரியங்களைப் பாராட்டு. எளிமையான சிறிய பரிசுகளை உன் மனைவிக்குக் கொடுத்து அவளை வியப்புறச்செய்.

☞ பிறர் முன்னிலையில் (உங்கள் பிள்ளைகளின் முன்னிலையில் கூட) உன் மனைவியைக் குறைவாகப் பேசாதே. அவள் உன் பிள்ளைகளின் தாய்.

☞ பிள்ளைகள் வளர்ப்பு கூட்டுமுயற்சி. மனைவி தான் அதற்குப் பொறுப்பு என்று விட்டு விடாதே. உன்னால் முடிந்தவரை பிள்ளைகளுடன் நேரம் செலவழி. அவர்களைக் கண்டித்து, ஆலோசனை கூறி வளர்ப்பதில் உனக்கும் முக்கிய பங்குண்டு.

☞ வீட்டை விட்டு நீ எங்கு சென்றாலும் கூடிய மட்டும் எங்கு செல்கிறாய் என்ற விபரங்களை மனைவியிடம் கூறிச் செல்வது அன்புடைய கணவனின் பொறுப்பு. செல்லுமிடத்தில் தாமதமாகும் எனத் தெரிந்தால் தொலைபேசி மூலம் வீட்டிற்கு தகவல் கொடுத்துவிடுவது நல்லது. வீணான டென்ஷனை இது தவிர்த்துவிடும்.

☞ உன் மனைவியை எக்காரணத்தைக் கொண்டும் அடிக்காதே. அது ஒரு பேடியின் செயல். வீர ஆண் மகனுக்கு அது அழகல்ல.

☞ பிறர் சொற்களைக் கேட்டுக் கொண்டு, உன் மனைவியை மட்டம் தட்டாதே. உன் பெற்றோராயிருந்தாலும், மற்றும் யாராயிருந்தாலும், உன் மனைவியை இழிவுபடுத்தவோ, துன்புறுத்தவோ, அடிக்கவோ நீ அனுமதியாதே. “வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் சுதந்திரம்; புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு” (நீதி. 19:14). அவளை தேவனுடைய கரத்திலிருந்து நீ பரிசாகப் பெற்றிருக்கிறாய்.

கொடுத்த அவருக்கு நீ கணக்கு ஒப்புவிக்க வேண்டியவன் அல்லவா? (1 பேது. 3:7 வாசி)

- உன் மனைவியின் நல்ல, சிறந்த ஆலோசனைகளைப் பாராட்டி, ஏற்றுக் கொள்ளக்கூடிய பெருந்தன்மை கொண்டவனாய் இரு.

உனது கவனத்திற்கு...

கணவன் தனது மனைவியை நேசிப்பதற்கான அளவுகோல் கிறிஸ்து திருச்சபையை நேசிப்பதைப் போன்றதாகும் (எபே. 5:28,29). கிறிஸ்து திருச்சபைக்காக தன்னையே ஒப்புக்கொடுத்தார் (எபே. 5:25-27; ரோமர். 5:8). அந்த அளவிற்கு மனைவியின் மீது கணவன் தியாக அன்பு கொண்டவனாய் இருக்கவேண்டும்.

உன் பெற்றோரை இடைக்கிடையே குடும்பமாக சென்று சந்தித்து வாருங்கள். உன் தாயோ அல்லது தகப்பனோ தனிமையாய் இருந்தால், அவரை மன நிறைவுடன் பராமரித்து வாருங்கள். அது உன் குடும்பத்திற்கு ஆசீர்வாதத்தையும், ஆயுள்காலத்தையும் அள்ளித்தரும்.

உனது தாய் தகப்பனின் மகிழ்ச்சி / துக்க நாளில் உனது பெற்றோரை சந்திக்கத் தவறாதே. அதிக தூரத்தில் இருந்தால் அன்றைய தினம் கையில் கிடைக்கத்தக்கதாய் கடிதமாவது எழுதி விடு.

அவர்கள் எதிர்பார்ப்பது உனது பணத்தையல்ல, உனது அன்பையே. நீ அவர்களோடுசெலவிடும் நேரமும் உனது கடிதமுமே அவர்களை மகிழ்வுறச் செய்யும்.

அதுபோன்றே உனது மனைவியும் தனது பெற்றோரை ஆதரிக்க, அன்பு செலுத்த அவளை உற்சாகப்படுத்து.

4. மணமகளுக்கு ஆலோசனைகள்

இள மங்கையே! இப்போது...
நீ இளம் மனைவி;
உன் குடும்பத்தின் அச்சாணி;
உன் கணவனின் அன்பிற்குரியவள்;
அவனது நம்பிக்கைக்குரியவள்;
தேவ பக்தியுள்ள சந்ததியை எழுப்பும் தாய்.

உனது அழகிற்கு அழகு சேர்க்க சில அணிகலன்கள் இதோ :

1. தீமோ. 2:10	சாந்தம், அமைதியான ஆவி
1 பேது 3:1-6 :	கீழ்படிதல், இணங்கிய மனம்
சங் 45:10,11	ஒத்து வாழ்தல், கணவனின் வீட்டார் மீது சிறப்புக் கரிசனை
தீத். 2:4,5	கற்பு
நீதி. 11:16 (அ)	
நீதி. 31:27	சுறுசுறுப்பு
ஆதி. 24:17-20	உபசரித்தல், பிறர்க்கு உதவி செய்தல்

இவற்றை பொன்னிலும் மேலான பெருஞ்செல்வமாகவும், அழகான ஆபரணங்களாகவும் அணிந்தால் உள்ளான பூரண மகிமை பெற்று சிறந்து வாழலாம்.

மேலும் சில ஆலோசனைகள்

- கணவர் வரும்போது இன்முகத்தோடு, சிரித்து வரவேற்று உபசரி. அவரது கண்களுக்கு நிறைவுண்டாக்க கவனத்தோடு உன்னை அலங்கரித்துக் கொள்.
- முக மலர்ச்சியுடன் எதிர்த்துப் பேசாமல் கீழ்ப்படி. அவ்வாறே வாழ்ந்து வர ஆண்டவருடைய உதவியை நாடி ஜெபித்துப் பெற்றுக் கொள்.

☞ கணவரிடம் நகைச்சுவையாக பேசி, விளையாடு, அவரது நகைச்சுவைகளுக்குச் சிரி; அவருக்குப் பிடித்தமானவற்றை ருசியாக சமைத்து வழங்கு.

☞ ஒரு பெண் திருமணம் முடிந்து கணவன் வீட்டிற்கு போகும்போது அவள் என்ன படித்திருக்கிறாள் என்பதை விட கணவனுக்கு வயிறார சமைத்து போடத் தெரிகிறவளாய் போவது நல்லது. நன்றாய் சமைத்துப் போடும் மனைவி துரிதமாய் கணவன் இருதயத்தில் இடம் பிடிப்பாளே.

☞ கணவர் குடும்பத்துப் பெண்கள் உன்னை உடனடியாக அன்பு பாராட்டி ஏற்றுக் கொண்டு தங்களுள் ஒருவரைப்போல் நெருக்கம் கொள்ளவில்லையென்றால் அதுபற்றி மனம் பேதலிக்காதே: காலப் போக்கில் சரியாகி விடும் என்ற எதிர்பார்ப்போடு, இன்முகத்துடன் பழகி வா! தாய் மகள் சகோதரிகள் என்ற பெண்களுக்குள்ளான உறவின் நெருக்கங்கள் உனக்கும் புரியுமல்லவா!

☞ கணவர் ஏதாவது ஒன்றைப் பற்றி குறைகூறினால், 'உம்' என்று உட்காராதே; அல்லது அழுது அடம் பிடியாதே!

☞ வார்த்தைக்கு வார்த்தை எதிர் பேசி படபடவென்று பொரிந்து தள்ள வேண்டுமென்று கோபம் பொங்கி வரும்போது அப்படியே அமைதியைக் காத்துக் கொள். சற்றுநேரம் கழித்து அன்போடு அமைதியாக காரியங்களை எடுத்துக் கூறு. "சண்டைக்காரியும் கோபக்காரியுமான ஸ்திரியுடன் குடியிருப்பதைப் பார்க்கிலும் வனாந்தரத்தில் குடியிருப்பது நலம்" (நீதி 21:19, 16: 24).

☞ சீரான உணவை, சரியான நேரத்தில், போதுமான அளவு உட்கொள். உடல் பலவீனமடைய அனுமதியாதே. உன்னைச் சார்ந்து உன்குடும்பமே உள்ளது.

☞ "நொறுங்கல்" தீனியை இடைக்கிடையே சாப்பிட்டு, உடல் பருமனாக அனுமதியாதே.

- நீங்கள் தேவனுடைய ஆலயம் என்று வேதம் கூறுகிறது. உடலைச் சுத்தமாக வைப்பதிலும் அதைத் தேவனுடைய ஆலயமாகப் பேண வேண்டும். சில பெண்கள் தங்கள் உடலை அலங்கோலமாக வைப்பதை தேவ பக்தி என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். (இப்படிப் பட்டவர்களை மனைவிகளாகப் பெற்ற கணவன்மார் நிலைமை பரிதாபம்) குணசாலியான ஸ்திரியைப் பாருங்கள். அவள் சுறுசுறுப்பைப் பாருங்கள். அவளுடைய பிள்ளைகள் அவளைப் பாக்கியவதி என்பார்கள் (நீதி 31: 10-31).
- உள்ளதை மகிழ்வுடன் அனுபவிக்கப் பக்குவம் பெற்றுக்கொள். இது உன் வீடு. எவையெல்லாம் தேவை என்று உனக்குத் தெரியும். அவற்றை ஆண்டவரின் உதவியோடு பெற்றிட திட்டமிடு.
- "புத்தியுள்ள ஸ்திரி தன் வீட்டைக் கட்டுகிறாள் புத்தியில்லாத ஸ்திரியோ தன் கைகளினால் அதை இடித்துப் போடுகிறாள் (நீதி. 14:1). (நீதி 31:13-29 இதையும் வாசிக்கவும்).
- மிகவும் அவசியமான, எதிர்பாராத சந்தர்ப்பங்களைத் தவிர பெற்றோர் வீட்டிற்குத் தனியாக செல்லவேண்டாம். எப்பொழுதும் குடும்பமாகச் செல்வதே நலம். உனது கணவனின் குடும்பத்தைப் பற்றிய குறைகளில் ஒரு வார்த்தையைக் கூட உனது பெற்றோரிடம் கூறாதே. நேரடியாகக் கடவுளிடம் கூறுவதால் நல்ல பலன் ஏற்படும்.
- எவ்வளவேனும் கணவரை விட்டுப் பிரிந்திருக்க நேரிடாமல் பார்த்துக் கொள்.
- யாரானாலும் (உன் பெற்றோரேயானாலும்) உன் காது கேட்க உன் கணவரைப் பற்றிக் குறைவான கருத்துக்களைக் கூறி உன் மனதைக் கலைக்க அனுமதியாதே. "அவர் பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்" (உன் 5:8-16) என்று நீ உறுதியாக நம்பு.

இவர்களும் உன் பெற்றோரே!

மாமனார் மாமியாரைப் பெற்றோர்கள் ஸ்தானத்தில் வைத்து அன்பு செலுத்து. உனது பிள்ளைகளும் அவர்களுக்கு பாசமும் மரியாதையும் வழங்கும் வகையில் வளர்த்துவிடு.

அவர்களைப் பற்றி, உன் கணவரிடம் அடிக்கடி குறைவாகப் பேசி நச்சரிக்காதே. இப்படிச் செய்து வந்தால், உனக்கும் உன் கணவனுக்குமிடையே இடைவெளி ஏற்பட்டுவிடும்.

உனது மாமனார், மாமியாருக்காகத் தினமும் நன்றியறிதலோடு ஆண்டவரிடம் மன்றாடு. உன் கணவனை நன்முறையில் வளர்த்து, ஆளாக்கிவிட்டதற்காக நன்றி செலுத்து.

மாதந்தோறும் உனது கணவன் தன் பெற்றோருக்கு ஒரு தொகையை அனுப்பும்படி பார்த்துக் கொள்வது உனது பொறுப்பு. நீங்கள் அனுப்பும் தொகை உங்களுக்கு மிகுந்த ஆசீர்வாதத்தையும் உனது மாமனார் மாமியாருக்கு மனநிறைவையும் தரும்.

அவர்களது அந்திய காலத்தில் அன்போடு பராமரிப்பாய் என்ற நம்பிக்கையை அவர்கள் உள்ளத்தில் ஊன்றிவிடு. “உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயது சென்றவளாகும் போது அவளை அசட்டை பண்ணாதே” (நீதி. 23:22)

5. குடும்பப் பொருளாதாரத்தைத் திட்டமிடுதல்

பணம் முக்கியமானது! தேவையானது. ஆகவே பணத்தை விரயம் செய்யாதீர். ஆடம்பரமான செலவுகளைத் தவிர்த்து விடுங்கள். சேமிப்புக் கணக்கில் முதலில் இருந்தே உங்கள் தகுதிக்கேற்ப சேமித்து வாருங்கள். பணக் குறைவு குடும்பத்திற்குள் வாக்குவாதங்களைக் கொண்டு வரலாம். திட்டமிட்ட வரவு செலவு குடும்பத்தில் மனநிறைவையும், சமாதானத்தையும் கொண்டு வரும்.

திட்டமிடுதல்

திட்டமிடுதல் என்பது, நமது வருவாய்க்கு ஏற்றவகையில் செலவுகளைத் திட்டமிடுதல், மற்றும், எதிர்காலப் பாதுகாப்பிற்கு வழிவகுத்தலாகும். திட்டமிடும்போது, எதற்கு முன்னுரிமை தருவது என்பதில் தெளிவு அவசியம். முதலில் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். உணவு, உடை, இருப்பிடம் என்பவை தவிர்க்கக் கூடாத அடிப்படைத் தேவைகளாகும். அது போன்றே, கல்வியும், மருத்துவமும் நமது நல வாழ்விற்கு அவசியமானவை. இத்தேவைகள் பூர்த்தியான பின்னரே, நாம் வசதிகளை நாட வேண்டும்.

மற்றவர்களைப் பார்த்து வாழாதே

மற்றவர்களைப் பார்த்து நாமும் அவர்களைப் போல வாழவேண்டும் என எண்ணுவது தவறு. நமது வருமானத்துக்குத் தக்கபடி நமது வாழ்வை அமைத்துக் கொள்வது அவசியம்.

சேமித்து வாழ்வதே சிறப்பு

வசதியான வீடோ, வாகனங்களோ, வீட்டு உபயோகப் பொருட்களோ, நமது தேவைக்கேற்ப திட்டமிட்ட சேமிப்பின் மூலம் வாங்குதல் நலம். எதிர் பாராத செலவுகளையும், எதிர்காலப் பாதுகாப்பையையும், சொந்த வீடு, திருமணம் போன்ற பெரிய செலவுகளையும் கருத்தில் கொண்டு சேமிப்பது மிக அவசியமாகும். மாறாக கையில் வருமானம் வந்ததும், ஆடம்பரச் செலவுகள் செய்வது கடன் தொல்லைக்கு நம்மை ஆளாக்கும். அத்துடன் சில நேரங்களில் அது திருமண வாழ்வின் முறிவிற்கும், தற்கொலைக்கும் இட்டுச் செல்வதுண்டு.

உங்கள் கவனத்திற்கு...

பணத்தைத் தேடுவதற்காக, நீங்கள் ஒன்றாகச் செலவிடும் நேரத்தையும், கலந்துரையாடும் வாய்ப்புகளையும் இழக்க வேண்டாம்.உங்கள் அன்புறவு பணத்தை விட மேலானது.

6. திருமணம் - பாலுறவு - குடும்பம்

திருமணம், பாலுறவு ஆகியவற்றைப் பற்றி பேசுவது வெட்கத்திற்குரியது என்று கருதப்பட்ட காலங்களும் உண்டு. ஏன், இன்று கூட அங்ஙனம் கருதுபவர்கள் உண்டு. இப்படிப்பட்டவர்கள் திருமணம், பாலுறவு இவற்றின் புனிதத்தைப் புரிந்துகொள்ள வில்லை என்று தான் சொல்ல வேண்டும். பால் உணர்ச்சி களைக் கடவுளே படைத்தார். மனித நன்மைக்காவும் மகிழ்வுக்காகவும் படைத்தார். அவை கடவுள் மனிதனுக்கு வழங்கிய அருட்கொடை களாகும். கடவுள் படைக்க வெட்கப்படாதவற்றைக் குறித்து நாம் பேசவும் வெட்கப்படக்கூடாது என்று ஒரு ஆதித் திருச்சபை தந்தை கூறியுள்ளார். எனவே பாலுறவு குறித்து சரியான உண்மைகளைக் கற்றுக் கொள்வோம். தவறான எண்ணங்களைக் களைந்தெறிவோம்.

பொங்கும் அன்பும் புனிதமான பாலுறவும்

கணவனும் மனைவியும், உடல் சார்ந்த முறையில் தங்கள் உள்ளத்து அன்பை வெளிப்படுத்துவதே பாலுறவு. அன்பின் வழியாகத்தான் இது மனிதப்பண்பை பெறுகிறது. அன்பு இல்லாத பாலுறவு வேசித்தனம். இருவரிடையே அன்பு எவ்வளவு உண்மையாக உள்ளதோ, அதைப் பொறுத்தே அவர்களுடைய பாலுறவு அர்த்தம் உள்ளதாக அமையும்.

திருமண வாழ்வில் பாலுறவு என்பது உடல் சார்ந்தது என்பதை விட அது அதிகமாக உள்ளம் சார்ந்தது எனக் கூறலாம். உள்ளம் சார்ந்த அன்பு, ஆதரவு, கரிசனை இவற்றைக் கணவனும் மனைவியும் ஒருவருக் கொருவர் வழங்க நாள் முழுவதும் பல வாய்ப்புக்கள் உண்டு. இவ்வாய்ப்புக்களை அவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இதைத் தொடர்ந்து இருவரும் ஒருவருக்கொருவர் தங்களை அன்புப் பரிசாக வழங்குகின்றனர். இதில் ஒளிவு, மறைவு இல்லை. ஒருவரிடம் ஒருவர் முழு நம்பிக்கையோடு அடைக்கலம் ஆகின்றனர்.

திருமணத் தம்பதியரும் திருப்தியான பாலுறவும்

திருமணமான சில நாள்களிலேயே, ஆண் பெண் இருவரும் பாலியல் வாழ்வில் பூரண திருப்தி அடையலாம்; அடையாமலும் இருக்கலாம். முன் பெற்ற அறிவு மற்றும் வளர்ந்த முறையினால் ஒருவருக்கு பாலியல் வாழ்வில் அதிக ஆர்வம் இருக்கலாம். முன் பெற்ற தவறான கண்ணோட்டத்தினால் அடுத்தவருக்கு குறைவான ஆர்வமிருக் கலாம். இதைப் புரிந்து கொண்டு, பாலுறவில் ஆர்வம் இல்லாதவருக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் வண்ணம் செயல்படவேண்டும். காலப் போக்கில், ஒருவரைப் பற்றி ஒருவர் நன்கு அறிந்தபின் அவர்கள் முழு திருப்தியை அனுபவிப்பார்கள்.

“உடலுறவில் தன்னால் பூரண ஒத்துழைப்பைத் தன் துணைக்கு கொடுக்க முடியவில்லையே” என்று ஒருவர் கவலைப்படுவதும், “பாலுறவு திருப்தியாக தனக்கு கிடைக்கவில்லையே” என்று மற்றொருவர் கவலைப்படுவதும் தம்பதியரிடையே திருமண வாழ்வின் அன்புநிலை வளர்ச்சியடையவில்லை என்பதையே காட்டுகிறது. மேலும், பாலுறவில் நிதானம் அவசியம். இதில் ஆணினுடைய பொறுப்பு அதிகம்.

மனவேறுபாடும் பாலுறவும்

அநேகர் பாலுணர்வு சம்பந்தமான பிரச்சினைகளை எதிர்நோக்கு கிறார்கள். மனைவிமார்கள் கணவனைப் பழிவாங்குவதற்கு, தங்களுடைய

கோபத்தைப் பிரதிபலிப்பதற்கு தன்கணவனின் சரீரப்பிரகாரமான ஆசையைப் பூர்த்தி செய்ய மறுக்கிறார்கள். அது போன்றே, தன் மனைவியைச் சொந்த சரீரமாகக் கருத வேண்டிய கணவன்மார்கள் அவர்களைத் திருப்திபடுத்த கவனம் செலுத்துவதில்லை. இந்த பிரச்சினைகளே அநேக குடும்பங்களில் ஏமாற்றத்தை ஏற்படுத்தி, பெரிய சண்டையையும் மனவேறுபாட்டையும் உருவாக்குகிறது. சில நேரங்களில் திருமண உறவை விட்டு வெளியே உள்ள நபர்களிடம் உறவு கொள்ளவும் தூண்டுகிறது.

மனைவிகளே, இதை உணர்ந்து உங்களை நாடிவரும் உங்கள் கணவனை அசட்டை செய்யாதிருங்கள். கணவன்மாரே, உங்கள் மனைவி உங்கள் சொந்த சரீரமாய் இருப்பதால் அவளைத் திருப்தி செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். ஆனாலும் பெண்களைப் பொருத்தமட்டில் பாலுறவை விட நாள் முழுவதும் பகிர்ந்து கொள்ள வேண்டிய அன்புக்குத்தான் முதலிடம் கொடுப்பர். எனவே உங்கள் மனைவியுடன் உங்கள் அன்பைத் தாராளமாய் பகிர்ந்து கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் பாலுறவில் மகிழ்ச்சியும், மனநிறைவும் உண்டாகும்.

மகிழ்ச்சியான பாலுறவும் மனம் திறந்த உரையாடலும்

பிறர் நலம் நாடும் மக்களால் மட்டுமே கடவுளால் ஏற்படுத்தப்பட்ட பாலுறவில் திருப்தியைக் காணமுடியும். அதாவது பாலுறவின் திருப்திக்குப் கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உதவி செய்யவேண்டும் என்பதுதான் இதன் பொருளாகும். தான் செய்வ தெல்லாம் தன் மனைவிக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும் என ஒரு புருஷன் நினைக்கலாம். ஆனால் அது நேர் எதிரான விளைவை உண்டாக்கிக் கொண்டிருக்கலாம். அவள் தன் புருஷனிடத்தில்

அது குறித்துப் பேசவேண்டும். தனது தேவை என்ன என்பதை தனது புருஷனிடத்தில் மனம் திறந்து பரிமாறிக் கொள்ள வேண்டும். பலருடைய வாழ்க்கையின் பின்னணியில், பாலுறவைக் குறித்த எதிர்மறையான அனுபவங்கள் இருப்பதினால் தங்கள் பாலுறவில் அவர்கள் திருப்தி அடைவதில்லை. இப்படிப்பட்டவர்கள் மனந்திறந்து தனது துணைவருடன் / துணைவியுடன் தங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இருதயத்தின் ஆழத்தில் உள்ள எண்ணங்களில் சுகம் உண்டாகும். பின்பு அதைத் தொடர்ந்து பாலுறவில் திருப்தி ஏற்படும்.

பாலியல் வாழ்வும் போதைப் பொருட்களும்

போதைப் பொருட்கள் நரம்புகளைத் தூண்டி, காம உணர்வை மேலோங்கச் செய்தாலும், பாலியல் சுகத்தை முழுமையாக அனுபவிக்க உதவாது. ஏனென்றால், நரம்புகள் அடிக்கடி முறுக்கேற்றப்பட்டு, தளர்த்தப்பட்டு, நரம்புகளுக்கு உள்ள இயல்பான ஆற்றலை அவை இழந்து விடுகின்றது. போதைப் பொருட்கள் தலையிலுள்ள முக்கிய நரம்பான மூளை நரம்பை பாதித்து, பாலியல் ஈடுபாட்டைச் சிறிது சிறிதாகக் குறைக்க வைக்கிறது. இதனால் நரம்புத் தளர்ச்சி, கை, கால்கள் நடுக்கம், இளமையில் முதுமை, வாழ்வில் விரக்தி ஏற்படுகிறது. எனவே போதைப் பொருட்களைத் தவிர்ப்பது மிக மிக அவசியம்.

மேலும் விபரங்களுக்கு, கிறிஸ்தவ புத்தக நிலையங்களில் கிடைக்கும் கீழ்க்கண்ட புத்தகங்களை வாசிக்கலாம்.

1. **Bruce & Carol Britten, Answers for your Marriage**
2. **Questions Young People Ask**

(மேற்கண்ட இரண்டு புத்தகங்களும் தமிழிலும் கிடைக்கும்)

1. ***உங்கள் திருமண வாழ்வின் கேள்விகளுக்குப் பதில்கள்***
2. ***இளைஞர்கள் கேட்கும் கேள்விகள்.***

7. குழந்தை வளர்ப்பு

திருமண வாழ்வு உருவாக்கப்பட்டதின் சிறப்பான நோக்கங்களில் ஒன்று தேவ பக்தியுள்ள சந்ததியைப் பெறும் படியாக என்று மல்கியா தீர்க்கன் உரைக்கிறார் (2:15). தகப்பனையே உரித்து வைத்த மாதிரி குழந்தை உள்ளது என்ற வார்த்தையைக் கேட்ட பெற்றோர் மகிழ்கின்றனர். தோற்றத்தில் மாதிரி என்றால் சந்தோஷப்படும் பெற்றோர் தங்கள் தவறான வாழ்க்கையைப் பின்பற்றும்போது பிள்ளைகள் மீது கோபம் கொள்ளு கின்றனர். பிள்ளைகள் பெற்றோரின் போதனைகளைவிட பெற்றோரின் செயல்களைத்தான் அதிகமாக கடைப்பிடிப்பர். எனவே பெற்றோராகிய நாம் சரியான முன் மாதிரியாக வாழும்படி அழைக்கப்படுகிறோம். அப்போது நமது பிள்ளைகள் தேவ பக்தியுள்ள சந்ததியாய் விளங்குவர். குழந்தை வளர்ப்பிற்கான சில ஆலோசனைகளை நாம் தொடர்ந்து காணலாம்.

1. திருமண அன்பு, தம்பதியரது குறுகிய வட்டத்திற்குள் ஒடுங்கிவிடுவ தில்லை. அது ஒரு புதிய உயிரை வரவேற்கும் கனி தரும் திறந்த அன்பாக உள்ளது. கணவன் மனைவி, ஒருவருக்கொருவர் தங்களை ஒப்புக் கொடுத்ததின் அன்புப்பரிசு குழந்தையாகும். மனிதர் அடையக் கூடிய அரிய பேறுகளுள் ஒன்று மகப்பேறு, குழந்தை வளர்ப்பு இன்பமும், மனநிறைவும் தரும் பணியாகும். குழந்தைகளை நல்மக்களாக உருவாக்குவதின் மூலம் பெற்றோர்களை சாதனையாளர்களாக மாற்றும்

பணியாகும். பிள்ளைகளைப் பெற்றெடுப்பதுடன் நமது கடமை முடிவதில்லை. அவர்களை வளர்த்து நல்மக்களாக்குவதே நமது முக்கிய கடமையாகும்.

2. பிள்ளைப் பிறப்பில், வளர்ப்பில், அதன் பெற்றோரின் உள்ளத்தில் அன்பு ஊற்றுகள் அதிகமாகத் திறக்க, பெற்றோர் பாசத்திலும், பண்பிலும் வளர்கின்றனர். கணவன் மனைவி உறவு வலுவடைய, பொறுமை, தியாகம், போன்ற பண்புகளில் மேலும் வளர்கின்றனர். மொத்தத்தில் பண்பட்ட நல்மனிதர்களாக மாறும் ஒரு சிறந்த வாய்ப்பு குழந்தை வளர்ப்பின் மூலம் பெற்றோருக்குக் கிடைக்கிறது.

3. தாய்ப்பால், பிள்ளைகளுக்குச் சிறந்த அன்பமுது. விலையுயர்ந்த புட்டிப்பால் எதுவும் இதற்கு ஈடாகாது. பாலூட்டும் தாய் அந்தப் பிள்ளைக்கு தனது அன்பை ஊட்டுகிறாள். அந்த அன்பைப் பெறும் குழந்தை தன்னம்பிக்கையிலும், சுறுசுறுப்பிலும் வளரும். மேலும் தாய் தந்தையரின் அன்பின் அணைப்பு சிறுபிள்ளைகளுக்கு தன்னம்பிக்கையை ஊட்டும் ஓர் அருமருந்தாகும்.

4. பிள்ளைகளுடன் கலந்து பேசி, அவர்களுக்கு குடும்ப / வீட்டுப் பொறுப்புகளில் இயன்ற பங்கு அளித்து, பிள்ளைகள் செய்ய வேண்டிய காரியங்களை, அவர்களிடம் தெளிவாகவும், உறுதியாகவும் எடுத்து கூற வேண்டும்.

5. பிறர் முன்னிலையில் பிள்ளைகளைக் கண்டிப்பதை / தண்டிப்பதைத் தவிர்த்து, பிற பிள்ளைகளுடன் ஒப்பிடாது, பிள்ளைகளின் தவறுகளைத் திருத்த வேண்டும்.

6. பிள்ளைகளிடம் நல்ல சமூக உணர்வை, பெற்றோர் ஊட்ட வேண்டும். குறிப்பாக ஏழை எளியவர்கள், ஊனமுற்றோர்கள் நமது அன்பிற்கும், கரிசனைக்கும் உரியவர்கள் என்ற எண்ணத்தை அவர்கள் உள்ளத்தில் பிஞ்சு வயதிலேயே விதைக்கவேண்டும்.

7. பிள்ளைகள் அன்றன்றுள்ளப் பாடங்களை அன்றே கற்க சிறுவயதிலேயே பயிற்றுவித்தல் அவசியம். அப்படியானால் பிற்காலத்தில் அவர்களைப் பார்த்து படி, படி என்று ஓயாமல் சத்தமிடவேண்டிய அவசியம் பெற்றோருக்கு இருக்காது.

8. ஐந்து வயதிற்குள் பிள்ளைகளுடைய மூளையின் செயல்திறன் முழுவதுமாக வளர்ந்துவிடும் என்று மனவள மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர். எனவே ஐந்து வயதிற்குள் மனப்பாடம் செய்யும் திறமை, கேள்விகள் கேட்டு தங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளும் திறமை இவற்றில் பிள்ளைகள் வளர அவர்களை ஊக்குவிக்கவேண்டும்.

9. சிறு வயதிலேயே சின்ன வேலைகளை வீட்டில் செய்ய வைத்தல் நல்லது. இவ்வாறு வளர்க்கப்படும் பிள்ளைகள் பிற்காலத்தில் வீட்டின் கடமைகளை மகிழ்ச்சியோடு செய்வர். சிறு வயதில் செல்லம் கொடுத்துவிட்டு பிற்காலத்தில் வேலை ஏவினால் எரிச்சல் அடைவர்.

10. பிள்ளைகள் சில சந்தர்ப்பங்களில் எதிர்த்து பேசுவதைக் குறித்து கவலைப்படவேண்டாம். உடனடியாக பிரம்பை உபயோகிக்கவும் வேண்டாம். அந்த சந்தர்ப்ப சூழ்நிலைகளை நாம் பகுத்தறிந்து ஏற்ற ஆலோசனைகளை வழங்குவது நல்லது.

11. பிள்ளைகள் தவறு செய்யும் போது அவர்களைத் தண்டிக்க வேண்டுமே அன்றி நமது எரிச்சல்களை வெளிப்படுத்துவதற்காக பிள்ளைகளைத் தண்டிக்ககூடாது. மேலும் எதற்காக நாம் அவர்களைத் தண்டிக்கிறோம் என்பதை அவர்களுக்கு விளக்கிக் கூறுவது அவசியம்.

12. அளவுக்கு மீறிய ஆடம்பர வாழ்வை பிள்ளைகள் கற்றுக்கொள்ள அவர்களை அனுமதிக்க வேண்டாம்.

13. நல்ல நண்பர்களைத் தெரிந்தெடுக்கவும், தீய நண்பர்களை விட்டு விலகவும் பிள்ளைகள் மீது கண்ணோக்கமாய் இருப்பது அவசியம்.

14. பிள்ளைகளை மையமாக வைத்து செயல்படும் குடும்பம் (கேட்டதை யெல்லாம் வாங்கிக் கொடுத்தல், பிள்ளைகளை எந்த வேலையையும் செய்யவிடாதிருத்தல், அளவுக்கு மீறி செல்லம் கொடுத்தல் *etc)* பிள்ளைகள் தன்னம்பிக்கை, மற்றும் தைரியமற்றவர்களாக வாழ வழி செய்கிறது.

உங்கள் கவனத்திற்கு...

நீங்கள் திருமறையைக் கருத்தாய் வாசியுங்கள். அத்துடன் உங்கள் பிள்ளைகளும் திருமறையை வாசிக்கவும், வசனங்களை மனப்பாடம் செய்யவும் ஊக்குவியுங்கள். வாழ்வின் எல்லா சூழ்நிலைகளிலும் அந்த வசனங்கள் அவர்களுக்கு நல்ஆலோசனைகளைத் தரும்; ஆசீர்வாதங்களையும் கொண்டுவரும்.

குடும்பமாக ஜெபியுங்கள். குடும்ப ஜெபம் இல்லாத வீடு கூரையில்லாத வீடு என்ற எச்சரிப்பின் வாசகத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். குடும்ப ஜெபத்தில், உங்கள் பிள்ளைகளையும் ஜெபிப்பதற்கு ஊக்குவியுங்கள். வாழ்வின் எல்லா சூழ்நிலைகளிலும் தங்கள் காரியங்களை ஆண்டவரிடம் தெரிவிக்கவும், அவரையே சார்ந்து வாழவும் இதன் மூலம் அவர்கள் கற்றுக்கொள்வார்கள்.

குடும்பத்தில் பிள்ளைகளின் தனித்தன்மையைப் பாதுகாத்து அவர்களை அன்போடு பராமரிக்கவேண்டும். அதே நேரத்தில் குடும்பத்தில் அவர்கள் நிறைவேற்றவேண்டிய பணிகளையும் கற்றுக் கொடுக்க வேண்டும். எது அப்பாவை / அம்மாவை சந்தோஷப்படுத்தும் அல்லது வருத்தப்படுத்தும் என்பதை உணர்ந்து வாழ பிள்ளைகளை ஊக்குவிக்கவேண்டும். குடும்பத்தில் அவர்களுடைய உரிமையையும் (Rights), கடமையையும் (Responsibilities) அவர்கள் பகுத்தறிந்து வாழ கற்றுக்கொடுக்க வேண்டும்.

8. மணவாழ்வுப் பிரச்சினைகள்

மணவாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளையும், அவைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளையும் இந்த அத்தியாயத்தில் காண்போம்.

பிரச்சினைகள்

- அனுசரித்துப் போகக்கூடிய பக்குவமின்மை.
- விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையின்மை.
- தான் என்ற அகங்காரம்.
- தம்பதியருக்குரிய தனிமையின்மை.

- மனைவி பணக்காரியாகவோ, அல்லது மிகப் படித்தவளாகவோ இருந்தால், கணவனால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாத மனக்கொந்தளிப்பு, தாழ்வு மனப்பான்மையில் சிக்கித் தவித்தல்.

- எல்லா நேரங்களிலும், மனைவியே சரணாகதி அடைய வேண்டுமென்று கணவன் எதிர்பார்ப்பது.

- மனைவியை அடிமைபோல் நடத்துவது, அவளுக்குப் பேசவோ, கருத்துச் சொல்லவோ கூட உரிமையளிக்காமல், உயிரற்ற பொருளைப் போல், அவளை நடத்துவது.

- உழைத்துப் பெறும் ஊதியத்தில் நியாயமான பங்கினைக் குடும்ப நிர்வாகத்திற்குத் தராமல், தன்னலப் போக்கில் செலவு செய்துவிட்டு, குடும்பத்தைச் சிக்கலில் விடுவது.

- குழந்தை வளர்ப்பில் அக்கறை காட்டாமல் ஒதுங்கியிருப்பது.

- எதற்கெடுத்தாலும் குதர்க்கம் - குற்றப்பத்திரிக்கை வாசிப்பது.

- ஆடம்பரத்தில் நாட்டங்கொண்டு, பொருளாதார முட்டுக்கட்டை ஏற்படுத்துவது.

- குடும்ப ஆன்மீகத்தில் அக்கறையில்லாதது.

- குடி போதையிலே அளவுக்கு அதிகமான நாட்டம்

- பிற பெண்களுடன் கள்ளத்தொடர்பு

- பிற ஆண்களுடன் கள்ளத்தொடர்பு

- விருந்தினர் முன்னிலையில் தரக்குறைவாகவும், தரந்தாழ்த்தியும் மனைவியை, அல்லது கணவனைக் குறை கூறுதல்.

- திரைப்படங்களில் மட்டற்ற மோகம்.

- மித மிஞ்சிய பண ஆசை.

- அவ்வப்போது உணரக்கூடிய சிறு மனஸ்தாபங்களை, உடனுக்குடன் வெளிப்படுத்தி, மனக்குறையைப் போக்கிக் கொள்ளாமல், நெஞ்சின் ஆழத்திலேயே அமுக்கி இறுக வைத்து, ஒரு நாள் எரிமலையாக வெடித்து சிதறுவது.

- தான் பிறந்த வீட்டையும், குடும்பத்தையும் உயர்த்திப் பேசுவது. தன் துணையின் வீட்டையும் குடும்பத்தையும் தரக் குறைவாகப் பேசி மட்டந்தட்டுவது.

- மணவாழ்வில் ஈடுபடுமுன், பற்பலவிதமான கற்பனைக் கோட்டைகள் கட்டிக் கொண்டு, பொய்யான ஒரு துணையை உருவகப் படுத்தியிருப்பார்கள் சிலர். அந்த எதிர்பார்ப்பிற்கு ஏற்ப மணவாழ்வில் துணை அமையவில்லையென்றால், கற்பனைக் கோட்டை சிதறுகிறது. இதன் விளைவாக துணையை வெறுத்து ஒதுக்குகின்றனர்.

- கணவன் மனைவி இருவரின், கலை, பொழுதுபோக்கு, விருப்பு, வெறுப்பு மாறுபட்டதாயிருக்கலாம். அதனை வலுக்கட்டாயமாக மற்றவர் மாற்ற முயற்சிப்பதும், அடுத்தவரின் பெருமையைச் சிறுமைப் படுத்துவதும் வேதனைக்குரியது.

- இன்று அநேகக் குடும்பப் பெண்கள், வெளியிடங்களில் பணி புரிகின்றனர். இவர்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகிறது. குறிப்பாக, உடன் பணிபுரியும் ஊழியர்களுடன் மிகச் சாதாரணமாகப்

பேசி பழகுவதைக் கூட, கணவர்கள் தவறான கண்ணோட்டத்தில் எடை போடுவது புண்படுத்தும் செயலாகிறது.

- அழகிய மணமகளைத் தேடி கண்டடைகிறார்கள். ஆனால், சில நாட்களில் அந்த அழகே அவர்களுக்குப் பகையாகிறது... 'இவளைப் பார்த்து மற்றவர்களும் மயங்குவார்களோ' - என்ற மயக்கம் ஏற்பட்டுத் தவிக்கின்றனர்.

- பொருத்தமில்லாத மணமகன்-மணமகள்; பணம் ஒன்றையே பிரதானமாக மதித்து நிச்சயிக்கப்படும் திருமணம் சிறப்பதில்லை.

- நல்லவற்றைப் பாராட்டுவதும், புகழ்ந்து பேசுவதும் தேவையில்லை என்ற எண்ணம்.

குடும்பங்களில் ஏற்படும் கணவன்-மனைவி தகராறுகளுக்குப் பெரும்பாலும் ஆறு காரணங்கள் கூறப்படுகின்றன.

1. பணிகளைப் பகிர்ந்து செய்யாமை
2. பொருளாதாரம்
3. பிள்ளைகள் வளர்ப்பு
4. ஏனைய உறவுகள் (மாமியார், நாத்தனார் etc.)
5. பாலுறவு
6. வேலை, புற ஈடுபாடுகள்.

மணவாழ்வுப் பிரச்சினைகளைத் தீர்க்க, மனமொத்த இல்வாழ்வு வாழ வழிகள்.

கணவர்கள் கவனத்திற்கு

1. திருமணத்திற்குப்பின் உங்கள் வாழ்க்கையில் முதலிடம் பெறுபவள் உங்கள் மனைவிதான் என்ற பாதுகாப்புஉணர்ச்சியை (Sense of Security) உங்கள் மனைவிக்குக் கொடுங்கள். பெண்களுக்கு இப்பாதுகாப்பு உணர்ச்சி எவ்வளவு பெரிய தேவை என்பதை ஆண்களில் பலர் அறிவதில்லை. கணவர் இதயத்தில் முதலிடம் வகிக்கும் மனைவி, தான் பாதுகாப்பாக இருப்பதாக உணருகிறாள். தனது அன்றாட அலுவலில் ஆர்வம் காட்டும் கணவனை, அவள் பெரிதும் போற்றுகிறாள்.

எல்லாவற்றிற்கும், எல்லாருக்கும் மேலாக, தனக்கு மனமுவந்து செவிமடுக்கும் கணவன் இருக்கும் போது, அவள் எதற்கும் அஞ்சுவதில்லை.

2. உங்கள் மனைவியரை அன்புடனும், மதிப்புடனும், அதே வேளையில் ஆண்களுக்குரிய ஆற்றலுடனும் நடத்துங்கள். எல்லா பொறுப்பையும் மனைவியிடமே கொடுத்துவிட்டு கைகட்டி நிற்கும் 'அப்பாவிகளை' மனைவியர் மதிப்பதில்லை. ஆனால், ஆண்மையின் ஆற்றலை மிகைப்படக் கையாண்டு, மனைவியரை அடிமைகளாக நடத்துவதும் அறிவீனம்.

3. அன்பை உள்ளத்தில் மட்டும் தேக்கி வைக்காமல், புகழ்ச்சியையும், பாராட்டுகளையும் தாராளமாகக் கொடுத்து, உங்கள் மனைவியரிடத்தில் தன்னம்பிக்கையை வளருங்கள். (உ.ம்) "இன்று உன் சமையல் பிரமாதம்" "இந்த சேலையில் நீ ரொம்ப அழகாயிருக்கிறாய்" - இது போன்ற பாராட்டுகளும், இடையிடையே, தலையில் வைப்பதற்குப் பூவும், மனைவிக்குப் பிரியமான சில பொருட்களை வாங்கி வருவதும் போன்ற சிறு சிறு அன்பின் வெளிப்பாடுகள், இமயமலை அளவு நல்விளைவுகளை ஏற்படுத்தும்.

4. குடும்பப் பொறுப்பு ஒரு கூட்டு முயற்சி. ஆகவே பொறுப்புகளை, மனைவியரோடு சரி நிகராய்ப் பகிர்ந்து கொள்ளுங்கள் (உ.ம்) சமையலறையில் உங்கள் மனைவிக்கு உதவி செய்வது, மாலையில் பிள்ளைகளைக் கவனிப்பது அவளுக்கு இதமளிக்கும் செயல்கள்.

5. குறை கூறுவதைத் தவிர்த்து விடுங்கள். ஒரு பெண் எளிதில் தன்னம்பிக்கை இழந்து விடக் கூடியவள். அன்புக்கு அடிமையாகாத பெண்ணே கிடையாது. எனவே, சொல்வதைச் சொல்லுகிற முறையில் சொன்னால் நன்மையே விளையும்.

6. கூடுமானால், தனிக் குடித்தனம் நடத்துங்கள். உங்கள் தாய்ப் பாசமும், மனைவிப் பாசமும் ஒன்றையொன்று பாதிக்காமல், விவேகமாய் நடந்து கொள்ளுங்கள்.

7. உங்கள் மனைவியரை நல்ல பொழுது போக்கு நிகழ்ச்சிகளுக்கு அழைத்துச் செல்லுங்கள்.

8. உங்கள் மனைவியரின் மனநிலை மாற்றங்களை (Moods Variatons) புரிந்து கொள்ளுங்கள். அவளது மாதவிடாய் காலத்தில், அவள் எரிச்சலும், சோர்வும், சோம்பலும் அடைகிறாள்.

9. திருமண வாழ்வை மேம்படுத்த, மனைவி எடுக்கும் முயற்சிகளில் ஒத்துழையுங்கள்.

10. குடிப்பவன், மனைவி மக்களுடைய இரத்தத்தையே குடிக்கின்றான். குடி குடியைக் கெடுக்கும்.

மனைவியர் கவனத்திற்கு

1. உங்களுடைய நற்பண்புகளோடு, உங்களின் உடற்கவர்ச்சியும் கணவருக்குத் தேவைப்படுகிறது. எனவே உங்கள் உடல் ஆரோக்கியத்தைக் குறித்து கவனமாக இருங்கள். உங்களை அழகாக வைத்திருங்கள். உங்கள் கணவன் வேறு பெண்களை நாடக் காரணம் நீங்கள் தான் என்பதை மறவாதீர்கள்.

2. நாம் நாமாகத்தான் இருக்க முடியும். மற்றவர்போல் ஆக முயற்சிப்பது, உங்கள் மகிழ்ச்சியை அழிக்க நீங்களே எடுக்கும் முயற்சியாகும்.

3. எடுத்ததெற்கெல்லாம் உங்கள் பெற்றோரையே நாடிச் செல்வது, அவர்களது ஆலோசனையின்படியே நடப்பது, இவற்றை விட்டு விடுங்கள். உங்கள் கணவனின் பெற்றோரையும் உறவினர்களையும் பற்றி குறைவாகப் பேசாதீர்கள்.

4. கணவன் வாழ்வில் எவ்வளவுதான் தோல்வி வந்தாலும், தன் மனைவிக்கு, தான் எப்போதும் ஒரு வெற்றி வீரனே என்ற உணர்வு அவனுக்கு இருந்தால், எந்தத் தோல்வியையும் அவனால் வெல்ல முடியும். எனவே வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளில் அவனை உற்சாகப் படுத்துங்கள்.

5. பொறாமையையும், சந்தேக மனப்பான்மையையும் தவிர்த்து விடுங்கள். கணவனை சுதந்திரமாய் வாழ அனுமதியுங்கள். அவன் மற்ற ஆண், பெண் நண்பர்களோடு பழகுவதைக் கண்டு பொறாமை கொள்ளாதீர்கள். சந்தேகக்கோடு, சந்தோஷக்கேடு!

6. உங்கள் கணவனை அன்பால் அன்றி, கடுஞ்சொற்களால் ஒரு நாளும் திருத்த முடியாது.

7. திருமணத்திற்கு முன் உங்கள் பெற்றோர் உங்களைச் செல்லப் பிள்ளையாக வைத்திருந்தாலும், கணவனுக்கு மனைவியாக வந்தபின், இறந்த கால வாழ்வை எண்ணி உரிமை கோருவது அறிவீனம்.

8. கணவன், பிள்ளைகள் ஏனையோர் தேவைகளைக் குறிப்பறிந்து செய்பவளாக, சமையல் கலையை நன்கு தெரிந்தவளாக, வீட்டை தூய்மையாக வைத்திருப்பவளாக, சுத்தமாகவும் மலர்ந்த முகத்துடனும், சுறுசுறுப்புடன் இருப்பவளாக விளங்குவது அவசியம்.

9. கணவன் யார் மீதாவது கோபமாக இருந்தால் உங்கள் வார்த்தைகளால் அந்த கோபத்திற்கு அணை போடுங்கள். அவனைப் பழி வாங்கும் செயலுக்குத் தூண்டிவிடாதிருங்கள்.

10. எல்லாவற்றிற்கும் மேலாக 'பொறுமை' என்ற அருமையான பண்பை உங்களுள் உருவாக்க, வளர்க்க, இறைவனிடம் ஜெபியுங்கள்.

9. மனம் திறந்து பேசுங்கள்

நல்ல குடும்பத்தின் சிறப்பான அடையாளம் கணவன் மனைவியின் மனம் திறந்த உரையாடலே. இவ்வுரையாடல், ஒருவரை ஒருவர் நாளுக்கு நாள் நன்கு தெரிந்து கொள்ள, ஒருவர் மற்றவருடைய எண்ணங்கள், உணர்வுகள், அனுபவங்களைப் புரிந்து கொள்ள, மனச்சுமைகளைப் பகிர்ந்து மன அமைதி பெற உதவி செய்யும். அத்துடன் பிறருடைய வளர்ச்சிக்கு உதவவும், தன்னம்பிக்கையை உருவாக்கவும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், திருமண அன்புறவு ஏற்படவும், மனம் ஒத்த இல்வாழ்வு வாழவும் கணவன் மனைவிக்கிடையே மனம் திறந்த உரையாடல் தேவை.

உரையாடல்

உரையாடல் (காரியங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளுதல்) 3 வகைப்படும்.

1. சமுதாயத்தில் நடந்தவற்றை பகிர்ந்து கொள்ளுதல்
2. தங்களுடைய காரியங்களைப் பகிர்ந்து கொள்ளுதல்
3. தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளுதல்

1. சமுதாயத்தில் நடந்தவற்றை பகிர்ந்து கொள்ளுதல்

அந்த நாளில் தான் பார்த்த, கேட்ட பல காரியங்களைக் கணவன், மனைவி ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வது முதல் படியாகும். சில தம்பதியர் இந்த முதல் படியில் கூட கால் வைப்பதில்லை. அதாவது ஒருவருக்கொருவர் எதையுமே பேசிக் கொள்வதில்லை. இந்த நிலையில் உள்ளவர்கள் ஒருவருக்கொருவர் தங்களைச் சுற்றி சமுதாயத்தில் நடைபெறும் சாதாரண காரியங்களையாவது அடிக்கடி பேசுவது நலம். மௌனம் நீடிக்க, நீடிக்க ஒருவருக்கொருவர் அடுத்தவர் தன்மீது உண்மையான அன்பு வைத்துள்ளாரா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தும்.

2. தங்கள் காரியங்களைப் பகிர்ந்து கொள்ளுதல்

தங்கள் வேலை, தங்கள் வருமானம், தங்கள் பிள்ளைகள், தங்கள் எதிர்காலத் திட்டம் இவற்றைப் பற்றிப் பேசுவது இரண்டாவது படியாகும். இந்த பேச்சுக்களில் சில சமயம் கருத்து வேறுபாடு ஏற்படலாம். கருத்து வேறுபாடு ஏற்படுகிறது என்பதற்காக பேச்சுக்களைத் தவிர்த்து விடாமல் அன்பான முறையில் பேச்சைத் தொடரவும், இறுதியில் பொதுவானதொரு முடிவுக்கு வருவதும் அவசியம்.

3. தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளுதல்

இந்த மூன்றாவது படியில் தம்பதியர் தங்கள் உள்ளுணர்வுகளைப் பகிர்ந்து கொள்கின்றனர். "எனக்கு மனதிற்கு கஷ்டமாயிருக்கிறது" "எனக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறது" என்று உள்ளத்து உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளுதல் மிகவும் முக்கியம். இவ்வாறு உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளுவது தம்பதியருக்கிடையே பாசத்தையும், நேசத்தையும் வளரச் செய்யும்.

இல்லற வாழ்வின் உயிரோட்டமான இந்த தொடர்பை பல தம்பதியினர் அறுத்துப் போட முக்கியமான காரணங்களாகக் கூறப் படுபவை 1. பயம் 2. அளவுக்கதிகமான வேலைகள் 3. ஒருவர் கூறுவதை அடுத்தவர் காது கொடுத்து கேட்காத நிலை. இந்த மூன்று தடைகளையும் தம்பதியர் மேற்கொண்டால் ஒருவருக்கொருவர் தொடர்பு நன்கு வளரும். தொடர்பு வளர்ந்தால் அன்பு வளரும். அன்பு வளர்ந்தால் உங்கள் பிள்ளைகளின் நற்குணங்கள் வளரும். குடும்பமாக அன்புறவில் வளர்ந்தால் கிறிஸ்தவ சாட்சி வளரும்.

உங்கள் கவனத்திற்கு!!

திருமண வாழ்வின் உறவில் பிரச்சினைகள் ஏற்படுவது இயற்கையே! சிறிய சிறிய பிரச்சினைகள் ஒன்று சேர்ந்து இறுதியில் கௌரவப் பிரச்சினையாகி மணமுறிவுக்குக் கொண்டு செல்கிறது. எனவே பிரச்சினைகளின் ஆரம்பத்திலேயே ஒருவருக்கொருவர் மனம் விட்டு கலந்து பேசி அவற்றைத் தீர்த்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள். உங்களால் இயலாவிட்டால் குருவானவரின் உதவியைத் தேடுங்கள். **தயவு செய்து காலதாமதம் வேண்டாம்.** கடவுளுடைய கிருபையினால் தீர்வு காணமுடியாத குடும்பப் பிரச்சினையென்று ஒன்றுமில்லை.

10. மணமுறிவுக்கு இடமேயில்லை

திருமண உறவு ஓர் தொடர் உறவு



இந்த உறவைப் பிரிப்பதற்கு பெற்றோர்க்கு அதிகாரமில்லை; தம்பதியர்க்கு உரிமையில்லை. சட்டப்படி உடைத்து, பிய்த்துக் கொண்டாலும் அதினால் யாருக்கும் மனநிறைவு ஏற்பட்டதில்லை. ஏனெனில் திருமணம் கடவுளின் ஏற்பாடு; இதை ஏற்படுத்தியவர் தேவன்; மனிதன் எவனும் இதைப் பிரிக்கக் கூடாதென்று வேதத்தில் பலமுறை கட்டளையிட்டிருக்கிறார். குடும்ப உறவு பெற்றோர், சகோதரர், பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர் என முக்காலத்துக்கும் விரிந்து நிற்பது, அது தலைமுறைகளுக்கும் நிலைத்து நிற்பது. குழந்தைகளின் சீரான வளர்ப்புக்கு இன்றியமையாதது. தாய், தந்தையென்ற நெருக்கமான அன்புச் சூழ்நிலையில்தான் பிள்ளைகள் நல்ல சரீர, மன, அறிவு வளர்ச்சியைப் பெறுகின்றனர். பிள்ளைகள் தங்கள் காரியங்களைத் தாங்களே பார்க்கும் வளர்ச்சியைப் பெற்றுவிடும் சமயத்தில், பெற்றோர் ஒருவரையொருவர் சார்ந்திருக்க வேண்டிய நிலையை அடைந்து விடுகின்றனர்; பேரப் பிள்ளைகளுடன் விளையாட தாத்தா, பாட்டி வேண்டாமா? இவ்விதமாக ஆண்டவர், திருமண உறவை தலைமுறை தலைமுறையாகச் செல்லுகின்ற தொடர் உறவாக அமைத்துத் தந்திருக்கின்றார்.

திருமணத்தின் அடிப்படைப் பண்புகள் இரண்டு

1. ஒருவனுக்கு ஒருத்தி என்னும் ஒருமைப் பண்பு
2. முறிவடையா உறவு

7. ஒருவனுக்கு ஒருத்தி என்னும் ஒருமைப் பண்பு

ஒருவனுக்கு ஒருத்தி எனும் வாழ்க்கை அறம் திருமணத்தின் முதல் பண்பாக விளங்குகிறது. கணவன் மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் ஏற்று, அன்பிலும், உண்மையிலும், கற்பிலும் வாழ்வது தான் ஒருமைப் பண்பு. இந்த ஒருமைப் பண்பு பலதார மணத்திற்கு எதிரானது. அதாவது ஒரு ஆண் பல பெண்களை மணப்பதோ அல்லது ஒரு பெண் பல ஆண்களை மணப்பதோ இதற்கு முற்றிலும் முரணான மரபுகள். ஒரு மனைவி பல கணவர்கள் எனும் உறவு முறை இன்றும் பழங்குடி சமூகங்களில் தொடர்கின்றது. உண்மையில் இந்த இருவழக்கங்களும் பண்பட்ட சமூகங்களில் ஏற்புடைய நாகரீகமாக அமையவில்லை. இவை மணவாழ்வின் உண்மைத் தத்துவத்திற்கும் உயர்ந்த மாண்பிற்கும் எதிராக அமைந்துள்ளன.

திருச்சபை பலதார மணத்தை எப்பொழுதும் வன்மையாகக் கண்டித்துள்ளது. இதன் காரணங்கள் பின்வருமாறு :

1. பலதார மணம் திருமண நோக்கத்திற்கே எதிரானது. ஏனெனில் திருமணத்தில் கணவனுக்கும், மனைவிக்குமிடையே அன்புறவும் நம்பிக்கையும் முழுமையானதாக இருக்க வேண்டும். ஆனால் ஒருவர் இத்தகைய முழுமையான அர்ப்பணத்தை ஒருவருக்கு மட்டுமே செய்ய முடியும். பலருக்குச் செய்ய இயலாது.

2. பலதார மணத்திலே கணவன், எல்லா மனைவியரின் குழந்தைகளையும் ஒரே விதத்தில் அன்பு செய்ய முடியாது. இது குழந்தைகளின் உடல், உள்ள வளர்ச்சிகளைப் பாதிக்கும்.

3. ஒரு கணவன், பல மனைவியர் எனும் குடும்ப வாழ்வு பெண்ணடிமைத்தனத்தில் வெளிப்பாடு. இது பெண்களின் மாண்பைச் சிதைக்கிறது. சம உரிமைகளை மறுத்து அவர்களை ஆண்களின் உடைமையாக, போகப் பொருளாக மாற்றுகிறது.

2. முறிவடையா உறவு

திருமணத்தின் மற்றொரு இன்றியமையா பண்பு முறிவுபடா உறவாகும். திருமண ஒப்பந்தம் நிரந்தரமானது. மாறாத் தன்மை உடையது. இறப்பு தவிர வேறு எதுவும் அதனை முறிக்கலாகாது. தம்பதியர் தாமாகவே விரும்பினாலும், அல்லது வேறு எந்த அதிகாரமானாலும் திருமண ஒப்பந்தத்தை முறிக்க இயலாது என்பதை இப்பண்பு உணர்த்துகிறது.

படைப்பின் போதே இறைவன், ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள உறவை நிரந்தர உறவாகப் புனிதப்படுத்தியுள்ளார். ***திருமண பந்தத்தால் ஒரே உடலாக இணைக்கப்பட்ட இருவரும் தாய் தந்தையை விட்டு, ஒன்றித்து வாழ்வதே இறைவனின் விருப்பம்.***

“புருஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்” (ஆதியாகமம் 2:24).

“குமாரத்தியே கேள், நீ உன் செவியைச் சாய்த்து சிந்தித்துக் கொள்; உன் ஜனத்தையும், உன் தகப்பன் வீட்டையும் மறந்து விடு; அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார்” (சங்கீதம் 45: 10-11).

கணவன் மனைவி இருவருமே தங்கள் பெற்றோரை விட்டுப்பிரிந்து இருவரும் கூடி வாழவேண்டும் என்பதே திருமறையின் போதனை. ஆனால், திருமணமான தம்பதியர் தனிகுடித்தனம் நடத்தியே ஆகவேண்டும் என்பதோ, இனி இவர்களுக்கும் இவர்கள் பெற்றோர் களுக்குமிடையே எந்த தொடர்பும் இருக்கக்கூடாது என்பதோ இந்த வசனங்களின் பொருளல்ல. பதிலாக, திருமணமான பின்னரும் கணவன் மனைவி இருவரும் பெற்றோரின் ஆதிக்கத்தின் கீழே தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்ககூடாது என்பதும், கணவன் மனைவியாக இவர்கள் கூட்டாக, சுதந்திரமாகச் சிந்தித்து முடிவுகளை எடுக்கவேண்டும் என்பதும் மேற்கண்ட வசனங்களின் பொருளாகும்.

ஆனால் இவைகளையும் மீறி, காலப்போக்கில் ஒருவன் தன் மனைவியை விலக்கி விடுவது அடிக்கடி நிகழும் ஒன்றாக மாறியது. இன்றைய காலகட்டத்தில், பல பெண்கள் தங்கள் பெற்றோர் வீட்டில் அமர்ந்து கொண்டு, "செத்தாலும் இனிமேல் அவனுடன் வாழவே மாட்டேன்" என்று கூறுகின்றனர். இதற்கு அவர்கள் பல காரணங்களையும் குறிப்பிடுகின்றனர். அவைகளில் ஓரளவு உண்மையும் இருக்கலாம். ஆனால் அவர்களுடைய வாழ்வையும், அவர்களுடைய பிள்ளைகளின் வாழ்வையும் நொறுக்கி அழிப்பதற்காக அது சாத்தான் விரித்த வலை என்பதை இப்பெண்கள் அறிந்து கொள்வதில்லை. கணவனோடு அவளுக்கு இருந்த சிறு சிறு பிரச்சினைகள் தான் அவளுக்கு பெரிதாக தெரிந்ததேயன்றி திருமண பந்தத்தின் உன்னதமான நிலைமையையும், குடும்பங்கள் சேர்ந்து வாழவேண்டுமென்ற ஆண்டவரின் விருப்பத்தையும் குறித்து இப்பெண்கள் கவலைப்படுவதில்லை.

மணமுறிவு ஒரு அன்றாட நிகழ்ச்சியாக மாறிய வேளையில், இயேசு கிறிஸ்து திருமணத்தின் முறிவுபடாத தன்மையை இறைவனின் திட்டமாக மக்களுக்கு வெளிப்படுத்தினார். கடவுளே முன்னின்று கணவன் மனைவியை இணைத்திருப்பதால், மணமுறிவு செய்ய யாருக்கும் அதிகாரம் இல்லை என்பதைத் திட்டவட்டமாக எடுத்துரைத்தார். "இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்; இவ்விதமாய் அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருப்பார்கள்; ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்" (மாற்கு 10:8-9).

புனித பவுலும், கொரிந்து பட்டண மக்களுக்கு வழங்கிய அறிவுரையில், திருமணத்தின் முறிவுபடாத் தன்மையை வலியுறுத்திக் கூறியுள்ளார். மணமக்கள் வாழ்வின் இறுதிவரை ஒன்றிணைந்து வாழ்வது ஆண்டவரின் கட்டளை என்று குறிப்பிட்டுள்ளார்.

"விவாகம் பண்ணிக் கொண்டவர்களுக்கு நானல்ல, கர்த்தரே கட்டளையிடுகிறதாவது, மனைவியானவள் தன் புருஷனை விட்டுப்

பிரிந்து போகக் கூடாது. போனால், அவள் விவாகமில்லாதிருக்கக்கடவள் அல்லது புருஷனோடே ஒப்புரவாகக்கடவள். புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடக் கூடாது" (1 கொரிந்தியர் 7:10-11).

கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள அன்புறவு முறிவுபடாதது என்று திருச்சபை வலியுறுத்துவதற்குச் சில முக்கியமான காரணங்கள் உள்ளன.

1. திருமண உறவு புனிதமானது. அது கிறிஸ்துவிற்கும் திருச்சபைக்கும் உள்ள உடன்படிக்கை உறவை பிரதிபலிப்பது; எனவே அது வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டும்.

2. மணமுறிவு பெற்று பிரிந்து வாழும் கணவனும் மனைவியும் தங்கள் உள் மனதில் ஆழமான காயங்களைத் தாங்கியுள்ளார்கள். இவை காலப்போக்கில் அவர்களது வாழ்வையே கசப்பானதாக, அர்த்தமற்றதாக மாற்றி விடும்.

3. மணமுறிவு, குழந்தைகளின் உடல் உள்ள வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கிறது. அவர்களின் எதிர்காலமே கேள்விக் குறியாகி விடுகிறது.

4. மண முறிவுகள் பெருகும் போது, சமுதாயத்தில் ஒழுக்கம் சீர்குலைந்து விடும். மனித மாண்பு சிதைந்து விடும்.

5. மணவாழ்வில் எழும் பிரச்சினைகளைக் கணவனும் - மனைவியும் உரையாடல் வழியாக சுமூகமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டும். அனைத்து நற்குணங்களையும் பெற்ற பூரணமான புருஷன் அல்லது மனைவி என்று உலகில் எவரும் கிடையாது. யாவருமே குறையுள்ளவர்கள்தான். எனவே ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, நிறைகுறைகளை ஏற்றுக் கொண்டு வாழ்வது அவசியம். அப்பொழுதுதான் தம்பதியர் உண்மையான மகிழ்ச்சியைக் காண முடியும். ஆகையால் சின்னச் சின்ன, பிரச்சினைகளைப் பெரிதுபடுத்தி மணமுறிவு தேட முயல்வது கிறிஸ்தவ அன்பிற்கு முற்றிலும் முரணானது.

நிறைவுரை

இந்நூலை வாசித்து முடித்திருக்கும் சகோதரனே / சகோதரியே உங்களை இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். திருமறையிலிருந்து இரண்டு வசனங்களை உங்கள் முன் வைத்து இந்நூலை நிறைவு செய்கிறேன்.

முதலாவது, "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" (அப். 20:35). பொதுவாக, காணிக்கை கொடுப்பதற்காக பயன்படுத்தப் படும் இந்த வசனம் மிகவும் ஆழமான பொருளுடையது. குறிப்பாக, திருமண வாழ்விற்கு மிகவும் பொருத்தமானது. கணவனும், மனைவியும் ஒருவரிடமிருந்து மற்றவர் பல காரியங்களைப் பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டுகிறோம். ஆனால், அதே காரியங்களை நமது வாழ்க்கைத் துணைவருக்கு / துணைவிக்கு கொடுப்பதில் நாம் எவ்வளவு ஆர்வம் காட்டுகிறோம்? அன்பு, ஆதரவு, நட்பு, தியாகம், பொறுமை, பெருந் தன்மை, மன்னிப்பு, சகிப்புத்தன்மை போன்றவற்றை ஒருவருக் கொருவர் வாரி வழங்கும் போது இல்லற வாழ்வு சுவையுள்ளதாக விளங்கும்.

இரண்டாவது, "முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது" (பிர. 4:12). முப்புரிகளாலான கம்பி அல்லது கயிறு சீக்கிரமாய் அறுந்து போகாது. அவைகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளதால், அந்த பிணைப்பானது அவைகளுக்கு மாபெரும் வலிமையைக் கொடுக்கின்றது. அதுபோன்றே நீங்களும் உங்கள் கணவனும் / மனைவியும் கிறிஸ்துவுடன் இணைந்து உங்கள் இல்லற வாழ்வை நடத்துவீர்களென்றால் உங்கள் வாழ்வின் இணைப்பு பலம் பொருந்தியதாக அமையும். உங்கள் வாழ்வு சாட்சியுடையதாக விளங்கும். கர்த்தர் நாள்தோறும் உங்களுக்கு முன்சென்று சகல ஆசீர்வாதத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்.

தொடர்பு முகவரி

பேராயர் இல்லம்

த.பெ.எண். 118

பாளையங்கோட்டை - 627 002

✆ 0462 - 2578744